வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 07.10.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 302 பக்கங்கள் : 16




## 51:1 தீர்மானம் நிறைவேறியது!

# 20 ஆதரவு 07 எதிர்ப்பு 20 நடுநிலை

ஜெனிவா, ஒக்ரோபர் 07

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தொடர்பில் முன்வைக்கப்பட்ட 19 அம்ச பிரேரணைகள் கொண்ட வரைவு 13 மேலதிக வாக்குகளால் தீர் மானமாக நிறைவேற்றப்பட்டது. 15

## தீர்மானத்தை வரவேற்றது ஐரோப்பிய ஒன்றியம்!

பிரிஸ்பேர்ன், ஒக். 07

மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற் றப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் ஐ. நா. சர்வ தேச சகாக்களுடன் ஈடுபாட்டை பேணவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனநாயக விழுமியங்கள் மனித உரிமைகள் சட்டத்தின் ஆட்சி குறித்த கலந்துரையாடல்களிற்கு முழுமையான ஆதரவளிப்போம் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ)

# முரண்பாடுகளை மறந்து அனைவரும் ஒன்றிணைக!

## ஜனாதிபதி ரணில் அழைப்பு

- இந்தியா தொடர்ந்து உதவுவதற்கு உறுதி
- 50 கோடி டொலர் ஆசிய வங்கி வழங்கும்
- கடனை மறுசீரமைக்க ஜப்பான் உதவும்



கொழும்பு, ஒக். 07

“தேசிய சபை, விரைவில் ஸ்தாபிக்கப்படவுள்ள மக்கள் சபை, பாராளுமன்ற துறைசார் குழுக்கள் போன்றவற்றின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் பொதுவான வேலைத் திட்டத்துடன் இணையுமாறு மீண்டும் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்”

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றில் விசேட உரையாற்றியபோதே அவர் மேற்படி அழைப்பை விடுத்தார். 15

## “ஐ. எம். எவ்வின் நிபந்தனைகளை வழங்க முடியாது”

கொழும்பு, ஒக். 07

சர்வதேச நாணய நிதியத்துடனான ஊழியர் மட்ட இணக்கப்பாடு நிபந்தனை களை பாராளுமன்றத்துக்கு தற்போது சமர்பிக்க முடியாது. இன்னும் ஓரிரு வாரங்களுக்கு பிறகு நிபந்தனை களை தெளிவுபடுத்த அவதானம் 15

## சாணக்கியன் எம். பிக்கும் எனக்கும் உயிரச்சுறுத்தல்!

### சபையில் தெரிவித்தார் சுமந்திரன்

கொழும்பு, ஒக். 06

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராச மாணிக்கம் உட்பட என்னைப் பின்தொடர்ந்த கிழக்கு மாகாண பதிவிலக்கத்தை கொண்ட மோட்டார் சைக் கிளில் வந்தவர்களால் எமது உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் சபாநாய கரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சிறப்புரிமையை பிரச்னைகளை முன்வைத்தே 15

# வடக்கையும் தெற்கையும் தீர்மானம் துருவப்படுத்தும்!




## ஜெனிவாவில் இலங்கை அரசு!

ஜெனிவா, ஒக். 07

மனித உரிமைகள் பேரவையின் கோட்பாடுகளுக்கு மாறாக, வடக்கு - தெற்கை துருவப்படுத்தும் - அரசியல்மயமாக்கலுக்கு இந் தத் தீர்மானம் மற்றோர் உதாரணம் என்பதை வாக்கெடுப்பு முடிவு நிரூபிக்கிறது - என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். 15

## தமிழரின் நியாயமான அபிலாசைகளை நிறைவேற்ற இந்தியா செயலாற்றும்!




### ஜெனிவாவில் அந்த நாட்டு பிரதிநிதி உறுதி

ஜெனிவா, ஒக். 07

இலங்கையில் தமிழர்களின் நியாய பூர்வமான அபிலாசைகளை நிறை வேற்றுவதற்காக இந்தியா இலங்கை மற்றும் சர்வதேச சகாக்களுடன் இணைந்து 15

## 13 வயது சிறுமி வன்புணர்வு 73 வயது முதியவர் கைது!

### கோப்பாயில் கொடூர சம்பவம்!

யாழ்ப்பாணம், ஒக். 07

இருபாலையில் 13 வயது சிறுமியை வன் புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 73 வயது முதியவரை பொலிஸார் கைது செய் 15

ஈழநாடு



## இப்படியும் நடக்கிறது...!

பாராளுமன்றத்தில் நேற்று விவாதத்துக்கு எடுக்கப்படவிருந்த இருபத்தி இரண்டாவது அரசமைப்பு திருத்தத்துக்கான விவாதம் அடுத்த அமர்வுவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவது பெரும்பாலும் சந்தேகத்துக்கு உரியதே என்ற ஊகத்தை நேற்றைய இந்தப் பத்தியில் பதிவிட்டிருந்தேன். ஆனால், அது வாக்கெடுப்புக்கு வரவில்லை. ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை, இந்தத் திருத்தம் குறித்து எதிர்க்கட்சிகளின் கருத்தை அறிந்துகொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமரை கேட்டிருப்பதாக செய்திகள் தெரிவித்திருந்தன.

எதிரணியினர் இதுகுறித்து மாறிமாறி தமது கருத்துக்களை தெரிவித்து வருவதால், அவர்களின் கருத்தை அறிந்துகொள்வதற்காகவே அதுகுறித்து பாராளுமன்ற விவாதம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகக் கருதலாம். ஆனால், நேற்று குறிப்பிட்டது போல அது நிறைவேற்றப்பட முடியாவிட்டால் அதுகுறித்து அதிகம் மகிழ்ச்சியடையப் போகின்றவர் வேறுயாருமல்ல ஜனாதிபதி ரணில்தான்.

இனி அடுத்த பாராளுமன்ற அமர்வு வரை அதற்காகப் பொறுத்திருப்போம்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டதால் எதிர்வரும் மார்ச் மாதம் வரை அவை மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்படும். மார்ச் மாதத்தின் பின்னர் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தன்னாலான முயற்சிகளை செய்துகொண்டிருக்கின்ற போதிலும் அதனை எப்படி பிற்போடலாம் என்பதில் ஆளும்தரப்பு அதீத கவனம் செலுத்தி வருகின்றது என்ற செய்திகளும் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

கடைசியாக வட்டார மற்றும் விகிதாசார கலப்பு முறையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுன முதல் தடவையாக போட்டியிட்டிருந்தபோதிலும் பெரு வெற்றியையும் பதிவுசெய்திருந்தது. அதேபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழர் பகுதிகளில் வெற்றிபெற்றிருந்தது.

ஆனாலும் அந்தத் தேர்தலில் சேர்க்கப்பட்டிருந்த விகிதாசார கலப்பு முறையால் சின்னச்சின்ன கட்சிகள், குழுக்களும் கூட பிரதிநிதித்துவம் பெறமுடிந்தது. இதனால் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தவர்களால்கூட பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியவில்லை. அதனால்தான் பல சபைகளில் இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் அடுத்த தேர்தலிலும் அதே முறையைப் பின்பற்றாமல் மாற்றலாமா என்ற யோசனை இருப்பதாக கூறப்படுகின்றது.

அவ்வாறு புதிய யோசனை ஒன்றை முன்வைத்து தேர்தலை பிற்போடுவதற்கு ஆளும்தரப்பு முயற்சி செய்யலாம் என்ற சந்தேகம் பல தரப்பினரிடையேயும் இருக்கின்றது.

உள்ளூராட்சி தோல்தலை இவ்வாறு ஒத்திவைத்தாலும், மாகாண சபை தேர்தல்களை முதலில் நடத்தினால் நல்லது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவரின் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் யோசனை தெரிவித்து வருகின்றனர் என்று கொழும்பில் ஐ. தே. கவுடன் நெருக்கமான ஒருவர் கூறினார்.

அண்மைக்காலமாக இந்தியத் தரப்பும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுத்து வருகின்றது. ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையிலும் இந்தியா இதனை வலியுறுத்தியிருந்தது. ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அதிகாரப் பரவலை வலியுறுத்தியிருக்கின்றது.

இந்நிலையில், மாகாண சபை தேர்தலை முதலில் நடத்தி இந்தியாவின் ஆதரவை அரசு பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பாக ஜனாதிபதி ரணில்மீது இந்தியா அதிருப்தியில் இருப்பதாக கூறப்படும் நிலையில் மாகாண சபை தேர்தலை நடத்தி அவர்களுக்கு நல்லெண்ண சமிக்ஞையை காட்டவேண்டும் என்றும் முக்கிய ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்கள் யோசனை தெரிவித்து வருகின்றனராம்.

இன்றைய நிலையில், தேர்தல் நடைபெற்றால் பொதுஜன முன்னணி மாத்திரமே பாரிய தோல்வியை எதிர்கொள்ள நேரிடும். ஆனாலும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்தின் துணிவற்ற நடவடிக்கைகளும் அவருக்கு மிகப்பெரிய வெற்றியை கொடுக்கப் போவதில்லை என்பதாலும் ரணில் ஒருவரால் மாத்திரமே நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் கண்டு, நாட்டை சகஜ நிலைக்கு கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் பரவலாக இருப்பதாலும் ஐ. தே. க. கணிசமான வெற்றியை பதிவுசெய்யலாம் என்று அவர்கள் நம்புவதாலேயே இவ்வாறு ஒரு தேர்தலை விரும்புவதாகவும் தெரிகின்றது.

இப்படியொரு தேர்தலை நடத்துவதன் மூலம் பொதுஜன முன்னணியினருக்கு தமது நிலையை அறிந்துகொள்ள உதவும் என்பதால், அவர்களை வழிக்குக் கொண்டுவரவும் இது உதவும் என்று நினைக்கிறார்களாம்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை எந்தத் தேர்தல் நடந்தாலும் அதற்கு அது இலாபமானதுதானே.!

- ஊர்க்குருவி

# இந்திய துணைத் தூதரகத்தால் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்!



யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் வட மாகாண பாடசாலைகள் மட்டத்தில் கற்று வரும் மாணவர்களின் திறன் ஆற்றல் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறி புலமைப்பரிசில் வழங்கும் நோக்கிலான காசோலைகள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று தனியார் விடுதியில் நடைபெற்றது.

துணைத் தூதரகத்தின் பதவிநிலை அதிகாரி எஸ். பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஸ் நடராஜ் கலந்து கொண்டு வட மாகாண 13 கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகளில் 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் அதிதிறமைச்சித்தி பெறுபேறுகளை மாகாண மட்டத்தில் மாவட்ட ரீதியாக பெற்றுக் கொண்ட 13 மாணவர்களுக்கு ஒருவருக்கு 25,000 ரூபாய் வீதம்படி 3,25000 ரூபாய் காசோலைகளை வழங்கினார்.

இதில், வட மாகாண அமைச்சுக்களின் செயலகம், பணிப்பாளர்கள் அலுவலகம், மாவட்ட செயலகம் அரச தொழில்துறை திணைக்களம் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, விவசாயம் உள்ளிட்ட துறைசார்ந்த அரச அதிகாரிகளுக்கான இந்திய புலமைப்பரிசில் தொடர்பாக கருத்தரங்கு இடம்பெற்ற இதில், புலமைப் பரிசில் தொடர்பான ஆக்கபூர்வமான விளங்கங்களும் வழங்கப்பட்டது. இந்திய புலமைப்பரிசில் வட மாகாணத்தில் இருந்து எவரும் முக்கியத்துவம் காட்டாத நிலையையும் அதனை அரச அதிகாரி தெளிவூட்டல்களை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நிலையை தெளிவூட்டப்பட்டது. இந்த நிகழ்வில் வட மாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன், யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# தமிழ் ஆசிரியர் தர்மராஜாவின் இலக்கண நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 07

தென்மராட்சியின் புகழ்பூத்த தமிழாசிரியர் அ. க. தர்மராஜா எழுதிய தீந்தமிழ் இலக்கணம் என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வு தெகிவளை தமிழ் மகா வித்தியாலய அதிபர் சோம. முரளி தலைமையில் நடைபெறும்.

வாழ்த்துரைகளை டிறிபேர்க் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர்களான மு. நாகேந்திரராஜா, க. அருந்தவபாலன் மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந. சர்வேஸ்வரன், பலாலி ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை அதிபர் கு. சதாசிவமூர்த்தி, தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் வே. உதயகுமார், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் ஆகியோர் ஆற்றுவர்.

நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதிமுதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும் ஆய்வுரையை தென்மராட்சி கல்வி வலய தொழில்வழிகாட்டல் அலுவலர் க. க. ஈஸ்வரனும் ஆற்றுவர்.

300 இற்கும் அதிக பக்கங்களைக் கொண்ட இந்நூல் உயர்தர வகுப்புகளிலும் மற்றும் கலை முதற்தேர்வு (GAQ), பட்டக் கல்வி(B.A.) வகுப்புகளிலும் தமிழ் இலக்கணம் கற்கும் மாணவர்களுக்குப் பெரிதும் உகந்ததாக அமையும். நூலாசிரியர் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி சாவகச்சேரி இந்துக் கல்லூரி என்பவற்றின் முன்னாள் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கல்வி அமைச்சில் விஜயதசமி பூஜை

கொழும்பு, ஒக். 07

இசுருபாய கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் விஜயதசமி பூஜை சிறப்பாக நடைபெற்றது.

கலாநிதி சிவஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள் பூஜையை நடத்தியிருந்தார். கல்வி அமைச்சர் சட்டத்தரணி சுசில் பிரேமஜெயந்த, இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார், இராஜாங்க அமைச்சர் விஜித பேருகொட, கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஏனைய சமய தலைவர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். அத்துடன், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
07.10.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கோட்டாபயவின் மீள்வருகை சாத்தியமானதா?

கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் அரசியலில் ஆர்வம் காண்பிப்பதான செய்திகள் வெளிவருகின்றன. மக்கள் மத்தியில் தன்னைப் பற்றிய எண்ணங்களை மாற்றியமைக்கும் முயற்சியில் அவரின் குழுவினர் ஈடுபடுகின்றர் என்று கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியானது அவரைப் பொறுத்த வரையில் அதிர்ச்சிமிக்கது. 69 இலட்சம் வாக்குகளை பெற்று சிங்கள மக்களின் பேராதரவுடன் வெற்றியீட்டிய ஒருவர் அதே சிங்கள மக்களால் பதவியிலிருந்து துரத்தப்பட்டார் என்னும் வரலாற்றை மாற்றிய மைப்பதற்கான வாய்ப்பு கிடைக்குமனால் - அதனை பயன்படுத்திக் கொள்ள கோட்டாபய முயற்சிப்பது ஆச்சரியமான ஒன்றல்ல. ஆனால், அது இலகுவான விடயமாக இருக்குமா என்பதே கேள்வி.

கோட்டாபய ராஜபக்ஷ தனது தேர்தல் வெற்றிக்கான தயார்ப் படுத்தல்களை மிகவும் கச்சிதமாகத் திட்டமிட்டிருந்தார். "வியத்கம" என்னும் அமைப்பை உருவாக்கி தென்பகுதியிலிலுள்ள சிங்கள - பௌத்த தேசியவாத சிந்தனைப் போக்குடைய தரப்பினர் அனைவரையும் ஒன்றுபடுத்தினார். 2015இல் மகிந்த ராஜபக்ஷவின் தோல்வியை தனது எழுச்சிக்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டார். ராஜபக்ஷக்களின் பக்கத்தில் தன்னைவிடவும் பொருத்தமான நபர் வேறு எவரும் இல்லையென்பதை நிரூபிக்கும் நோக்கிலேயே விடயங்கள் ஒவ்வொன்றையும் நன்கு திட்டமிட்டு முன்னெடுத்தார். தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவில்லாமல் வெற்றிபெறுவது என்பதே, கோட்டாபயவின் வெற்றிக்கான தந்திரோபாயத்தின் அச்சாணியாக இருந்தது. அவர் திட்டமிட்டவாறே தேர்தல் வெற்றியும் அமைந்தது.

தேர்தல் வெற்றிக்குப் பின்னரும், தனது சிங்கள - பௌத்த தேசியவாத வேலைத்திட்டத்தை மேலும் நிறுவனமயப்படுத்தும் நோக்கிலேயே அவரின் செயல்பாடுகள் அமைந்திருந்தன. சிங்கள - பௌத்த தேசியவாத வேலைத்திட்டம் ஒன்றின் மூலம் தொடர்ந்தும் அதிகாரத்தை தக்கவைக்கும் நோக்கிலேயே விடயங்களை முன்னெடுத்திருந்தார். தன்னையொரு சிங்கள - பௌத்த தலைவனாக பிரகடனம் செய்த கோட்டாபய தமிழ் மக்களுக்கென்று தனியான பிரச்னைகள் இல்லை - அவர்களுக்கென்று பிரத்தியேக அரசியல் தீர்வு தேவையில்லை என்பதில் மிகவும் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருந்தார்.

ஒரு புதிய அரசியல் யாப்பின் மூலம், இலங்கைத் தீவை ஒரு சிங்கள - பௌத்த குடியரசாக மாற்றுவதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபடுவதான சந்தேகங்கள் சுட்டிக்காட்டப்பட்டது. குறிப்பாக, அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை முற்றிலுமாக இல்லாமலாக்கும் எண்ணத்துடன் அவர் செயல்படுவதான தோற்றமே தென்பட்டது. இந்த பின்புலத்திலேயே, 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கைக்கு பொருத்தமானதல்ல என்னும் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய மிலிந்த மொறகொடவை இந்தியாவுக்கான தூதுவராக நியமித்திருந்தார்.

இப்படி சிங்களவர்களின் நலனுக்கான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு கச்சிதமாக முன்னெடுத்துக் கொண்டிருந்த கோட்டாபய ராஜபக்ஷவை சிங்கள மக்களே அதிகாரத்திலிருந்து அப்புறப்படுத்தினர். நாட்டை விட்டு வெளியேறி பிறநாடுகளில் பாதுகாப்பு கோரும் நிலைமையை ஏற்படுத்தினர். இவ்வாறானதோர் அவமானகரமான அரசியல் வரலாற்றை சரிசெய்வதற்கு கோட்டாபய முயற்சிக்கலாம். கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் அதிகாரத்துக்கு வருவது இலகுவானதல்ல. ஆனால், அரசியலில் எதுவும், எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் என்னும் வரலாற்று பட்டறிவையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை மட்டுமே கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவாரென்பதை எவராலும் கணிக்க முடிந்ததா? இதே போன்றுதான் ஏனைய விடயங்களையும் நாம் உற்று நோக்க வேண்டியிருக்கின்றது. அதிகாரத்திலிருப்பவர்கள் சறுக்கி விழுகின்ற இடத்தை இன்னொருவர் கைப்பற்றிவிடுகின்றார்.

# போதைப் பொருட்களுடன் ஆயுதங்களும் வருகின்றன

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஒக். 07

போதைப் பொருள் வர்த்தகத்துக்கும், பாதாள குழுக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. வெளிநாடுகளில் இருந்து போதைப்பொருட்களுடன் ஆயுதங்களும் வருகின்றன. இங்கு நடக்கும் குற்றச் செயல்களை ஒருசிலர் வெளிநாடுகளில் இருந்து வழிநடத்துகின்றனர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகேவால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மினுவாங்கொடையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர். இதேவேளை நாடு முழுவதும் பாதாள குழுவினரால் முன்னெடுக்கப்படும் கொலை சம்பவங்கள் நடக்கின்றன. இது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனரா என்று தெரியவில்லை.

இந்நிலையில் பொலிஸ் திணைக்களத்தின் தற்போதைய இலகுவான பணியாக மக்கள் துன்பங்களால் உருவாகியுள்ள பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை முடக்கும் நடவடிக்கைகள் உள்ளன. பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டோரை கைது செய்கின்றனர்.

நாட்டின் பொலிஸார் மக்களுக்காக சட்டத்தை பாதுகாக்க வேண்டும். ஆனால், பாதாள செயல்பாடுகள் தொடர்பில் முறையாக நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. இப்போது பொலிஸார் முழுமையாக ஆர்ப்பாட்டங்களை முடக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றனர் - என்றார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் ரிலான் அலஸ் கூறுகையில்,

போதைப் பொருள் வர்த்தகமும் பாதாள குழுவும் ஒன்றாகவே பயணிக்கின்றது. கடந்த காலங்களில் போதைப் பொருள் நாட்டுக்கு வரும்போது அதனுடன் ஆயுதங்களும் வருகின்றன. வேண்டுமென்றால் கடந்த மாதங்களில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் அறிக்கைகளை சமர்ப்பிக்கலாம். சில சம்பவங்கள் வெளிநாடுகளில் இருந்தே நடக்கின்றன.

இப்போது நடந்த சம்பவத்தை எடுத்துக் கொண்டால் கொலை வழக்கு ஒன்றில் பக்கத்து வீட்டில் உள்ள மூவர் பிரதிவாதிகளாகும். அவர்களே கொள்ளப்பட்டுள்ளனர். போதைப் பொருள் தொடர்பான பண கொடுக்கல் வாங்கல்,குடும்பத்தில் ஒருவர் கொல்லப்படும்போது அதற்கு பழிவாங்கலாக இன்னுமொருவரை கொலை செய்தல் போன்ற சம்பவங்கள் நடக்கின்றன.

அமைதியான போராட்டத்துக்கு ஒரு போதும் தடை விதிக்கவில்லை..பொது ஒழுங்குக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் போராட்டத்தில் ஈடுப்படுமாறு பலமுறை வலியுறுத்தியுள்ள போதும் போராட்டத்தில் ஈடுப்படுபவர்கள் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் தான் செயற்படுகிறார்கள் - என்றார். (ஐ)

# கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை வாணிவிழா சிறப்புற இடம்பெற்றது!






யாழ்ப்பாணம், ஒக். 07

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் வாணிவிழா அதிபர் கவின்ஜா நவஜீவா தலைமையில் பாடசாலையின் மாலதி சுப்பிரமணியம் அரங்கில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. பூபாலசிங்கம், பாடசாலையின் பழைய மாணவியும் அறநெறி ஆசிரியையுமான கலா சுந்தரேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வாணி விழாவையொட்டி மாணவரிடையே போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
புதிய முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர்கள். நீண்ட நாள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும்.வியாபாரத்தில் புதிய அணுகுமுறையை கையாளுவீர்கள். நிதிநிலை உயரும். வராமல் இருந்த பணம் வந்து சேரும்.

**இடபம்**
வியாபாரத்தை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பு நலம் தரும். உங்கள் முயற்சி வெற்றியாகும். பணியாளர்களின் குறைகளை சரி செய்வீர்கள். தொழிலில் ஏற்பட்ட தடைகள் விலகும்.

**மிதுனம்**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடிகள் விலகும். முயற்சி லாபமாகும்.எதிர்பார்த்த நல்ல செய்தி வீடு தேடி வரும். உங்கள் செல்வாக்கு உயரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் தீரும்.

**கடகம்**
செயல்களில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் வேண்டாம். மற்றவரை நம்பி செய்யும் செயல் இழுபறியாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.எதிர்பாராத சங்கடங்களை சந்திப்பீர்கள்.

**சிம்மம்**
திட்டமிட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். சங்கடம் தீரும். ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்.பணியிடத்தில் உங்கள் ஆலோசனைகளுக்கு வரவேற்பு இருக்கும். பாராட்டு பெறுவீர்கள்.

**கன்னி**
உயர்ந்த இடத்தில் இருப்பவர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களின் ஆதரவு உண்டு.புதிய பொறுப்பு உங்களைத் தேடி வரும்.

**துலாம்**
பேச்சில் நிதானம் அவசியம்.முயற்சியில் முழுமையாக ஈடுபட்டாலும் முடிவு உங்களுக்கு எதிர்மறையாகும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த எண்ணம் உண்டாகும். சேமிப்பில் கவனம் செல்லும்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்பு ஒன்று தள்ளிப்போகும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். நண்பர்களால் அனுகூலம் காண்பீர்கள்.வியாபாரத்தில் அனுகூலம் ஏற்படும். வெளியூர் பயணம் ஆதாயத்தை ஏற்படுத்தும்.

**தனுசு**
எண்ணிய செயலை செய்து முடிப்பீர்கள். பணியாளர்கள் ஒத்துழைப்புடன் தொழிலை விரிவு செய்வீர்கள். நிதி நிலை உயரும்.வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறையால் போட்டியாளர்கள் விலகிச் செல்வார்கள்.

**மகரம்**
நீண்ட நாள் பிரச்னை ஒன்றில் முடிவு காண்பீர்கள். கேட்ட இடத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சங்கடம் விலகும்.புதிய வாய்ப்பு ஒன்று உங்களைத் தேடி வரும். வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம்**
செயல்களில் குழப்பம் ஏற்படும்.மற்றவர்கள் உங்களை அலட்சியம் செய்வதாக நினைத்து வருந்துவீர்கள். அலைச்சல் கூடும்.பணியில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். இல்லையெனில் இழப்புகள் ஏற்படும்.

**மீனம்**
அலைச்சல் அதிகரிக்கும். எடுத்த வேலையை முடிக்க முடியாமல் சங்கடப்படுவீர்கள். பணியிடத்தில் சில பிரச்னைகளை சந்திக்க வேண்டி வரும். செயல்களில் கவனம் தேவை. எதிர்பார்த்த வருமானம் இழுபறியாகும்.

# சிறையில் உண்ணாவிரதமிருக்கும் முருகனின் உடல்நிலை பாதிப்பு!



வேலூர், ஒக். 07

வேலூர் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வரும் முருகனுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டதால் 3 போத்தல் குளுக்கோஸ் செலுத்தப்பட்டது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள முருகன், வேலூர் ஆண்கள் மத்திய சிறையில் உயர் பாதுகாப்பு தொகுதியில் அடைக்கப் பட்டுள்ளார்.

இவர் மீதான ஒரு வழக்கின் விசாரணை தாமதம் ஏற்படுத்தப்படுவதை கண்டித்து, கடந்த மாதம் 8ஆம் திகதி முதல் உண்ணா விரதம் இருந்து வருகிறார்.

இதையடுத்து, வழக்கின் விசாரணையும் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் உண்ணாவிரதத்தை கைவிட முருகன் மறுத்து வருகிறார்.

இதனிடையே, முருகனின் உடல்நிலை நேற்று முன்தினம் பாதிக்கப்பட்டது. இதையடுத்து, சிறையில் உள்ள மருத்துவர்கள் பரிந்துரையின்பேரில் அவருக்கு 3 போத்தல் குளுக்கோஸ் செலுத்தப்பட்டது.

இது தொடர்பாக சிறைத்துறை அதிகாரிகள் தரப்பில் விசாரித்த போது, “சிறையில் வழங்கப்படும் உணவை அவர் வாங்க மறுத்து போராட்டம் நடத்தி வருகிறார். இருப்பினும் பழங்கள், உலர் திராட்சை உள்ளிட்டவற்றை சாப்பிடுகிறார். ஊட்டசத்து குறைபாடு காரணமாக அவரின் உடல்நிலை பாதிக்கிறது.

இதற்காக சீனி - உப்பு கரைசலை கைவசம் வைத்திருக்குமாறு கொடுத்துள்ளோம். அவரின் உடல் நிலையை மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்” என்றனர். (ஐ)

# கம்போடியாவில் சித்திரவதைபடும் 400 தமிழர்களையும் மீட்கவேண்டும்!

## பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ்

சென்னை, ஒக். 07

”கம்போடியாவில் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் தமிழர்களை உடனடியாக மத்திய, மாநில அரசுகள் மீட்க வேண்டும். அவர்களை இங்கிருந்து அனுப்பியவர்கள், சட்டவிரோத கும்பலுக்கு விற்றவர்களையும் அடையாளம் கண்டு கைது செய்து தண்டனை பெற்றுத் தர வேண்டும்” என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், ”கம்போடியாவில் வேலை தேடிச் சென்ற தமிழ் நாட்டைச் சேர்ந்த 400 பேர் அங்குள்ள சட்டவிரோத கும்பலிடம் சிக்கியிருப்பதாகவும், பட்டினி, உடலில் மின்சாரத்தை பாய்ச்சுதல் உள்ளிட்ட கொடுமைகளை அவர்கள் அனுபவிப்பதாகவும் அவர்களிடமிருந்து தப்பி வந்த இளைஞர் கூறியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

தாய்லாந்தில் வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்டு மியான்மருக்கு கடத்தி கொடுமைப்படுத்தப்பட்டு வரும் தமிழர்களில் இதுவரை 13 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ள நிலையில், அடுத்தக்கட்டமாக கம்போடியாவிலும் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு, கொடுமைபடுத்தப்படுவதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

பல லட்சம் பணம் செலுத்தி வேலை தேடி கம்போடியாவுக்கு சென்ற தமிழர்களை, அங்குள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவரே சட்ட விரோத கும்பலிடம் விற்பனை செய்ததாக கூறப்படுகிறது. வேலை தருவதாகக் கூறி தமிழர்களை அழைத்து, கடத்தி விற்பதை ஒரு கும்பல் தொழிலாகவே செய்வதை புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழர்களை கடத்தி வைத்துள்ள சட்டவிரோத கும்பல் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருப்பதாகவும், அவர்களிடம் பேச அங்குள்ள இந்திய தூதரக அதிகாரிகளே அஞ்சுவதாகவும் வெளியாகியுள்ள செய்திகள், அவர்களின் பாதுகாப்பு குறித்த அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

கம்போடியாவில் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் தமிழர்களை உடனடியாக மத்திய, மாநில அரசுகள் மீட்க வேண்டும். அவர்களை இங்கிருந்து அனுப்பியவர்கள், சட்டவிரோத கும்பலுக்கு விற்றவர்களையும் அடையாளம் கண்டு கைது செய்து தண்டனை பெற்றுத் தர வேண்டும்” என்று பதிவிட்டுள்ளார்.

# இராஜராஜன் காலத்தில் இந்து மதமே கிடையாது!

## கமல்ஹாசன் கருத்து



சென்னை, செப். 07

இராஜராஜ சோழன் காலத்தில் இந்து மதம் என்ற பெயரே கிடையாது என நடிகர் கமல்ஹாசன் கூறியுள்ளார்.

மணிரத்னத்தின் இயக்கத்தில் வெளியான பொன்னியின் செல்வன் திரைப்படத்தை நடிகர்கள் கார்த்தி, விக்ரமுடன் இணைந்து கமல்ஹாசன் நேற்றுமுன்தினம் பார்த்தார்.

திரைப்படம் முடிந்த பிறகு செய்தியாளர்களை சந்தித்த கமல்ஹாசன் ’பொன்னியின் செல்வன் திரைப் படம் மலைப்பாக இருக்கிறது. படக்குழுவினருக்கு வாழ்த்துக்கள்’ என்றார். இதைத் தொடர்ந்து அவரிடம் இயக்குநர் வெற்றிமாறன் ராஜராஜசோழனை இந்து மன்னனாக மாற்ற முயல்கிறார்கள் எனக் கூறியது குறித்து கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்கு கமல்ஹாசன், ‘ராஜராஜசோழன் காலத்தில் இந்தியாவில் இந்து மதம் என்கிற வார்த்தை கிடையாது. சைவம், வைணவம், சமணம் என்றுதான் இருந்தது. இவற்றை ஒரே சொல்லில் இணைத்தது ஆங்கிலேயர்கள்தான்’ என்றார்.

# தந்தையும் இரு மகன்களும் நேற்று சுட்டுப் படுகொலை!

## மினுவாங்கொடையில் பயங்கரம் சந்தேக நபர்கள் மூவர் கைது

கொழும்பு,ஒக்.07

**கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.**

ரி - 56 ரக துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது எனவும், தந்தை மற்றும் இரண்டு மகன்களே சம்பவத்தில் உயிரிழந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் கலேவெல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடை சாமகெதர பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரண்டு மகன்கள் உயிரிழந்தனர்.

51 வயதான தந்தை மற்றும் 23 மற்றும் 24 வயதுடைய அவரது இரு மகன்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நீண்ட நாட்களாக நிலவி வந்த தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைக்காக சந்தேகநபர்கள் கார் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# யாழ். நீராவியடியில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ்ப்பாணம், நீராவியடி பிள்ளையார் பகுதியில் ரயிலுடன் மோதுண்டதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த தபால் ரயிலுடன் மோதுண்டதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் அடையாளம்காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். இறந்தவர் 30 வயது மதிக்கத்தக்கவர். 5 அடி உயரமும் பொது நிறம் உடையவர். காற்சட்டை, வெள்ளை ரீசேட் அணிந்திருந்ததுடன் உலப்பனை-வட்டவளை, வட்டவளை-ஹட்டன் சென்ற பயணச்சீட்டு வைத்துள்ளார்.

இவர் கையை காட்டி ரயில் தண்டவாளம் முன் ரயில் வரும் போது நின்றுள்ளார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (அ)

# கோப் குழுவின் தலைமை மொட்டு கட்சி வசமானது!

கொழும்பு, ஒக். 07

பொது நிறுவனங்கள் தொடர்பான கோப் குழுவின் புதிய தலைவராக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப் குழுவின் முதலாவது கூட்டம், பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.இதன்போது கோப் குழு தலைவருக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

அதற்கமைய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உறுப்பின் ரஞ்சித் பண்டாரவுக்கு ஆதரவாக 15 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்னவுக்கு ஆதரவாக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

கோப் குழுவின் முந்தைய தலைவராகப் பேராசிரியர் சரித ஹேரத் செயற்பட்டு வந்தார்.

எவ்வாறாயினும், இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ள கோப் குழுவுக்கு அவர் தெரிவு செய்யப்படவில்லை.

இந்தநிலையில், கோப் குழுவிலிருந்து விலகவுள்ளதாக கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளதமையை அடுத்து அந்த வெற்றிடத்துக்குத் தாம் சரித்த ஹேரத்தை பரிந்துரைப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

இதேவேளை, அரச கணக்குகள் பற்றிய கோபா குழுவின் தலைவராக எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# காணாமல்போன மாணவரை தேடும் பணிகள் துரிதகதியில்

கொழும்பு, ஒக். 07

காணாமல்போன பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட மாணவனைத் தேடும் நடவடிக்கைகள் கடந்த 03 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டன.இருந்த போதிலும், நேற்று முன் தினம் மாலை வரை, மாணவன் தொடர்பில் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதியை விட்டு வெளியே வந்ததும்,இந்த மாணவன் கைத்தொலைபேசியை எடுத்துச் சென்றுள்ளார். எனினும் கைத்தொலைபேசி இயங்காமல் நிறுத்தப்பட்டுள்ளதால், குறித்த மாணவனைத் தொடர்பு கொள்ள முடியாதுள்ளதாக தெரியவருகின்றது.

தனது மகன், இவ்வாறு காணாமல்போவதற்கு எந்த காரணமும் இல்லை எனப் பெற்றோர் தெரிவித்தனர்.

இது குறித்து மாணவனின் தாயார் திருமதி ஜி.எஸ்.என்.பெரேரா பேராதனை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இந்த மாணவன் கடிதமொன்றை எழுதிவிட்டு விடுதியை விட்டு வெளியேறியுள்ளார். (அ)

ஈஸ்டர் தாக்குதல்:

# அடிப்படை உரிமை மீறல் மனு; சகல விசாரணைகளும் நிறைவு!

கொழும்பு, ஒக். 07

ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமானவர்களை தண்டிக்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 13 அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்கள் தொடர்பான விசாரணைகளை நிறைவுசெய்த உயர்நீதிமன்றம், எழுத்துமூல சமர்ப்பிப்புகளை 3 வாரங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு, இரு தரப்பினருக்கும் நேற்று முன் தினம் உத்தரவிட்டது.

இதற்கமைய, இந்த மனுக்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு உரிய காலப்பகுதிக்குள் வழங்கப்படவுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, எல்.டி.பி. தெஹிதெனிய, முர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய எழுவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, மனுதாரர் மற்றும் பிரதிவாதி தரப்பினர் முன்வைத்த வாதங்களை நிறைவு செய்யப்பட்டதையடுத்து, மூன்று வாரங்களுக்குள் எழுத்துமூலசமர்ப்பிப்புகளை தாக்கல் செய்யுமாறு இரு தரப்புகளுக்கும் அமர்வு உத்தரவிட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான இந்த மனுக்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை தொடர முடியாது என உயர்நீதிமன்றம் கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி அறிவித்திருந்ததுடன், எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான வழக்குகள் தொடரும் எனவும் அறிவித்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் தொடர்பில் அரசியலமைப்பின் 12(1) சரத்தின் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு உயர்நீதிமன்றம் 2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2 ஆம் திகதி அனுமதி வழங்கியது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உட்பட 13 மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுக்களில், பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமானவர்களைத் தண்டிக்க உத்தரவிடுமாறும் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 22 ஆவது திருத்தம் நிறைவேறுவதை ஒத்திப்போட ஜனாதிபதி புதுத்திட்டம்

கொழும்பு, ஒக்.07

22ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காய்களை நகர்த்தி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவு தொடர்பில் எதிர்க்கட்சிகளின் இறுதி நிலைப்பாட்டைக் குறித்து ஆராய்ந்து விரைவில் தமக்கு அறிவிக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு ரணில் ஆலோசனை வழங்கியுள்ளார்.

22 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல சந்தர்ப்பங்களில் முரண்பாடான நிலைப்பாட்டை எடுத்து வருவதாகவும் அதனாலேயே இந்த அறிவுறுத்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

22 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்பில் இருந்து எதிர்க்கட்சிக்கு சென்ற குழு ஒரு கருத்தையும், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட ஏனைய கட்சிகள் மற்றொரு கருத்தையும் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

22ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முதன்முதலில் எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளனர் எனவும், அதனாலேயே அவர்களின் நிலைப்பாட்டை ரணில் அறியத் தீர்மானித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது. (அ)

# இலங்கையில் காலாவதியாகும் 70 இலட்சம் பைஸர் தடுப்பூசிகள்!

கொழும்பு, ஒக். 07

எதிர்வரும் 31ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ள 07 மில்லியன் பைசர் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால், மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில்லை என சுகாதாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

ஈழநாடு






## வவுனியா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திடீரென தீ பற்றி எரிந்த மோட்டார் சைக்கிள்!

வவுனியா, ஒக். 07

வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பும்போது மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

வவுனியா ஹெரவப்பத்தான பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றது.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் உடனடியாக செயற்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையினால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. (அ)

# பல்கலைக்கழகங்களுக்குள் அரசியல் தீ மூட்டவேண்டாம்

### உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் கோரிக்கை

கொழும்பு, ஒக். 07

**பல்கலைக்கழகங்களினுள் அரசியல் தீயை மூட்டவேண்டாம் என்று வலியுறுத்தினார் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன்.**



“பல்கலைக்கழகத்திலோ - வெளியிலோ வன்முறைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஒருவரது மனித உரிமையை விட 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பிலேயே கவனம் செலுத்துவோம்” என்றும் அவர் கூறினார்.

பேராதனை பல்கலைக் கழகத்தில் பகிடிவதைச் சம்பவங்கள், அது தொடர்பிலான பெற்றோரின் முறைப்பாடுகள் மற்றும் அங்கு இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எம்.பி க்கள் சிலர் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பிலேயே இவ்வாறு தெரிவித்த உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், மேலும் கூறுகையில்,

“நாட்டில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக் கழக மாணவர்கள் உள்ளனர். அதில் ஒரு சிலரது மனித உரிமை பற்றி கவனம் மேற்கொள்வதா அல்லது 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பில் கவனம் செலுத்துவதா என்பது தொடர்பில் கற்றவர்கள் நன்கு அறிவர்

அரசியல் நோக்கத்திலும் பல்வேறு நோக்கங்களிலும் ஒருசிலர் பல்கலைக்கழகங்களினுள் செயற்பட்டு வருகின்றனர். தயவு செய்து அங்கு அரசியல் தீயை மூட்ட வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

பேராதனைச் சம்பவங்கள் தொடர்பில் எனக்குப் பெற்றோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து 600 இற்கும் மேற்பட்ட குறுஞ்செய்திகள் வந்துள்ளன.

மனித உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், குறுகிய நோக்கங்களுக்காகச் செயற்படுபவர்களையும் மற்றும் வன்முறைகளையும் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்-என்றார். (அ)

# பாராளுமன்ற ஊழியர் ஹெரோயினுடன் கைது

கொழும்பு, ஒக். 07

பத்தரமுல்ல பிரதேசத்தில் 100 கிராம் ஹெரோயினுடன் நேற்று முன் தினம் பாராளுமன்ற ஊழியர் ஒருவர் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஊழியர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

இந்நிலையில், 5 லீற்றர் பால் கேன் உட்பட பல பொருட்களை பாராளுமன்றத்திற்கு வெளியே கொண்டு செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் ஊழியர் ஒருவரும் நேற்றுமுன்தினம் சிரேஷ்ட அதிகாரி ஒருவரால் பிடிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்துக்கு முன்பாக உள்ள ஜெயந்திபுர பாதுகாப்பு நுழைவாயிலில் உள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அறிவித்ததன் பிரகாரம் உடனடியாக செயற்பட்ட பொலிஸார் அவரை பிடித்துள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

தேயிலை உள்ளிட்ட சில உணவுப் பொருட்களும் இவ்வாறு வெளியே கொண்டுவர முயன்றதாகக் கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் நேற்று முன் தினம் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

விசாரணையின் பின்னர் சம்பவம் தொடர்பிலான விசேட அறிக்கை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# தேநீர் விலை குறைப்பு!

கொழும்பு, ஒக். 07

ஒரு சாதாரண தேநீர் மற்றும் ஒரு கோப்பை பால் தேநீருக்கான அதிகபட்ச விலையை அறிவிக்குமாறு நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு இது தொடர்பான கடிதம் இன்று அனுப்பி வைக்கப்படும் என அதன் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இதன்படி, ஒரு சாதாரண தேநீரின் அதிகபட்ச விலை 30 ரூபாவாகவும், ஒரு கோப்பை பால் தேநீரின் அதிகபட்ச விலை 100 ரூபாவாகவும் விற்பனை செய்யுமாறு கோரப்படுவதாக அவர் கூறினார். (அ)

# வட்டிவீதம் மாற்றமில்லை

கொழும்பு, ஒக். 07

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை தற்போதைய மட்டத்தில் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற நாணயச் சபைக் கூட்டத்தில் வைப்பு விகிதத்தை 14.50 சதவீதமாகவும், கடனளிப்பு வீதத்தை 15.50 சதவீதமாகவும் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த முடிவுக்கு வரும் போது, சமீபத்திய மேக்ரோ பொருளாதார நிலைமைகள், எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள் மற்றும் மேக்ரோ பொருளாதார கணிப்புகளை வாரியம் பரிசீலித்ததாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் இறுக்கமான பண நிலைமைகள், பணவீக்கத்தின் குறையும் வேகம் மற்றும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய காரணிகளால் ஆதரிக்கப்படும் குறுகிய காலத்தில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கப் பாதை ஆகியவற்றை சபை குறிப்பிட்டது.

எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கப் பாதையை அடைவதற்கு பண நிலைமைகள் போதுமான அளவு இறுக்கமாக இருக்கும் என்று நாணயச் சபை கருதுகிறது. (அ)

# மில்கோவை வருமானமீட்டும் நிறுவனமாக மாற்ற முயற்சி!

கொழும்பு, ஒக். 07

அரசாங்கத்துக்குச் சொந்தமான பால் உற்பத்தி நிறுவனமான மில்கோ பிரைவேட் நிறுவனத்தை இலாபகரமான பொது நிறுவனமாக மாற்றுவதற்கான புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு விவசாய, வனவிலங்கு மற்றும் வனவள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர, நிறுவனத்தின் உயர் நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்கினார்.

மில்கோ தனியார் நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

2021 ஆம் ஆண்டில் பால் தொடர்பான பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் மில்கோ நிறுவனத்தின் வருமானம் 8,052 மில்லியன் ரூபாவாகும். ஆனால் 2022 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரை, நாட்டில் ஒரு குறிப்பிட்ட சில பொருளாதார பின்னடைவு ஏற்பட்டாலும், கடந்த ஆண்டின் சில மாதங்களுடன் ஒப்பிடும் போது 2022 இன் சில மாதங்களில் நிறுவனம் அதிக வருமானத்தை ஈட்ட முடிந்தது.

இந்த வருடத்தின் ஒகஸ்ட் மாதத்துக்குள் மில்கோ நிறுவனம் 7774 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்ட முடிந்துள்ளதாகவும் இந்த வருட இறுதிக்குள் குறைந்தபட்சம் 8,500 மில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்ட முடியும் எனவும் நிறுவனத்தின் உயர் நிர்வாகம் அமைச்சரிடம் தெரிவித்துள்ளது.

(அ)

# போலி வீஸாவில் இத்தாலிக்கு செல்ல முயன்றவர்கள் கைது!

கொழும்பு, ஒக். 07

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு போலி விஸாவைப் பயன்படுத்தி இத்தாலிக்கு செல்ல முயன்ற மூன்று நபர்களை கைது செய்தனர்.

அவர்கள் வசம் இருந்த போலியான குடியிருப்பு அனுமதி அட்டைகளையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இவர்கள் அம்பலாங்கொடை, மருதங்கேணி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கூற்றுப்படி, இந்த மூன்று நபர்களும் நாட்டில் நடத்தப்படும் மனித கடத்தல் வலையமைப்பினால் பாதிக்கப்பட்டவர்கள். கடத்தல் காரர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கட்டாரில் இருந்து நாடு கடத்தப்பட்ட மற்றுமொரு இலங்கைப் பயணி போலி இத்தாலி விஸா மூலம் இத்தாலிக்கு செல்ல முற்பட்டபோது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்தனர். இவர் செங்கலடி பகுதியைச் சேர்ந்தவர். (அ)

# இலங்கைக்கு வழங்கும் ஜி.எஸ்.பி. சலுகையை இடைநிறுத்தவேண்டும்

## ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தீர்மானம்

கொழும்பு, ஒக். 07

**ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இடைநிறுத்துவதற்கு ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அதற்கு 500க்கும் அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், எனினும் அந்த பிரேரணை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் கூறினார்.

இந்த நிலையில், குறித்த பிரேரணையை நடைமுறைப்படுத்தினால் இலங்கையின் ஆடைத் தொழிலில் 6 தொடக்கம் 7 இலட்சத்துக்கும் அதிகமானோர் வேலையிழக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கை தொடர்பில் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் இன்று (நேற்று) வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாகவும் முடிவுகள் ஆபத்தானதாக இருக்கலாம் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

(அ)

# ஆசிரியர், அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 07

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனச் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் உரிமைகளை வென்றெடுத்த பிரதிநிதிகளின் மாநாட்டில் கலந்துகொண்டபோதே ஜோசப் ஸ்டாலின் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இந்தப் பொருளாதாரக் கொள்கையில் அரசாங்கம் நாட்டை முழுவதுமாக திவாலாக்கிவிட்டது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

தற்போது, ஆசிரியர்கள் பாடசாலைக்கு வர வழியில்லை. கடுமையான பயணச் செலவுகளைச் சுமக்கவேண்டியுள்ளதாகவும் இதுகுறித்து அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

(அ)

# அரசியல்வாதியானாலும் மின்சாரம் துண்டிப்புதான்!

கொழும்பு, ஒக். 07

நிலுவை மின் கட்டணத்தை உடனடியாகச் செலுத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு இலங்கை மின்சார சபை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கொழும்பு 07 பகுதியில் அமைந்துள்ள வீட்டுக்குரிய 6 இலட்சத்து 37 ஆயிரத்து 448 ரூபா நிலுவை மின் கட்டணத்தைச் செலுத்துமாறே மின்சார சபை அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் ஹேமந்த ரணசிங்கவின் கையொப்பம் மற்றும் உத்தியோகப்பூர்வ இறப்பர் முத்திரையுடன் குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிலுவை மின் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறித்த வீட்டை கடந்த 2016 ஆம் ஆண்டு தன் பெயருக்கு பதிவு செய்துள்ளார் என்பதோடு, அப்போது 4 இலட்சத்து 94 ஆயிரத்து 739 ரூபாய் மின் கட்டணம் நிலுவையாக செலுத்தப்படாமலிருந்ததாக இலங்கை மின்சார சபை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதி வரை பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் பெயரில் பதிவாகியுள்ள கொழும்பில் 07 இல் அமைந்துள்ள வீட்டுக்கு 637,448,38 சதம் மின்கட்டணம் பதிவாகியுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

வழங்கப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் மின் கட்டணத்தைச் செலுத்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தவறும் பட்சத்தில் மின் இணைப்பைத் துண்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

(அ)

# பேஸ்புக் ஊடாக சம்பந்தனின் சிறப்புரிமையை மீறியமையை ஏற்ற நபர் மன்னிப்புக் கோரினார்!

கொழும்பு, ஒக். 07

சமூக ஊடகமான பேஸ்புக் மூலம் பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறியதாக ஏற்றுக்கொண்ட நபர் அது தொடர்பில் தனது கவலையை வெளியிட்டு ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் மன்னிப்புக் கோரியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் தொடர்பில் அவதூறான வகையில் வெளியிட்ட காணொளியின் ஊடாக அவருடைய சிறப்புரிமை மீறப்பட்டிருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த முகப்புத்தகக் கணக்கின் உரிமையாளர் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு அண்மையில் அழைக்கப்பட்டிருந்தார்.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் இந்த முறைப்பாடு குறித்த விசாரணை நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை தன்னால் மீறப்பட்டுள்ளது என்பதைக் குறித்த நபர் இங்கு ஏற்றுக்கொண்டமையால் இரு தரப்பினரின் இணக்கத்துக்கு அமைய நிபந்தனையுடன் குறித்த சம்பவம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதற்கமைய இது தொடர்பில் வருத்தம் தெரிவித்து மன்னிப்புக்கோரி பிரசித்தமான பத்திரிகையொன்றிலும் சம்பந்தப்பட்ட முகப்புத்தகத்திலும் அறிக்கை வெளியிடவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் விசாரணையை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்குமாறும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அந்த நபர் விடுவிக்கப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் அல்லது பொதுவாக பாராளுமன்றம் தொடர்பில் அவதூறாகக் கருத்துக்களை வெளியிட்டால் பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கும் உரிமை பாராளுமன்றத்துக்கும், உயர் நீதிமன்றத்துக்கும் காணப்படுவதாகக் குழுவின் தலைவர் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றத்தின் அதிகாரத்தின் கீழ் எச்சரிப்பதற்கு அல்லது ஆறு மாதங்கள் பாராளுமன்ற வளாகத்துக்குள் உள் நுழைவதைத் தடுப்பதற்கான அதிகாரம் இருப்பதாகவும், ஏதாவது தவறு இழைக்கப்பட்டிருப்பதாக ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டால் அதனை உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் இரண்டு வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் எனத் தலைவரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# சட்டவிரோத ஹம்மர் குறித்து விசாரணை நடத்தவேண்டும்

கொழும்பு, ஒக். 07

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட ஹம்மரைக் கைப்பற்றி அரசாங்க ஏலத்தின் மூலம் இறக்குமதியாளருக்கு மீள் விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான அறிக்கையை ஒரு வாரத்துக்குள் வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இலங்கை சுங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மூன்று வாகனங்களுடன் ஹம்மர் சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டது.

இந்த வாகனங்கள் அரச சொத்துக்களாக அறிவிக்கப்பட்டு பின்னர் ஏலம் விடப்பட்டு ஹம்மர் வாகனம் இறக்குமதி செய்த நபரால் வாங்கப்பட்டது.

ஹம்மர் தொடர்பான ஏல நடைமுறைகள் குறித்த தெளிவான விவரங்களை சுங்கத்திணைக் களத்தினால் வழங்க முடியாததை அடுத்து கவலைகள் எழுந்துள்ளதாக இராஜாங்க அமைச் சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அந்த வாகனத்தின் மதிப்பு ரூ. 40 மில்லியன். ரூ.27.5 மில்லியனுக்கு ஏலத்தில் விற்கப்பட்ட தாக அவர் கூறினார். இதனால் 33.75 வீத இழப்பு ஏற்பட்டது.

இலங்கையின் சுங்கச் சட்டத்தின் பிரகாரம், மொத்த பெறுமதியில் 10 வீதத்துக்கு குறையாத விலைக்கு மட்டுமே கேள்வி கோரல் சபைக்கு விற்பனை செய்ய அனுமதி உண்டு என இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வருவாயை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் நேரத்தில், இந்த பரிவர்த்தனையின் மூலம் மதிப்பிடப்பட்ட தொகையைப் பெறாதது குறித்து ஆராய்வது அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

(அ)

# உணவகங்களுக்கு விற்கப்படும் மனித பாவனைக்குதவாத அரிசி

## இரண்டு ஆலைகளுக்கு சீல்

கொழும்பு, ஒக். 07

பாவனைக்குதவாத அரிசியை விற்பனைக்காக பொதி செய்துகொண்டிருந்த இரண்டு அரிசி ஆலைகள் சோதனையிடப்பட்டு 16000 கிலோ அரிசி மீட்கப்பட்டுள்ளதுடன் இரண்டு ஆலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டது.

அளுத்கம தர்கா நகரம் மற்றும் பேருவளையில் உள்ள அரிசி களஞ்சியசாலைகளே இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளதாக களுத்துறை தேசிய சுகாதார நிறுவகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பேருவளை பொலிஸ் விஷேட பணியகத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் களுத்துறை தேசிய சுகாதார நிறுவக அதிகாரிகள் மற்றும் பேருவளை வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் உள்ள களஞ்சியசாலையொன்றில் இருந்து கால்நடை தீவனத்துக்காக அளுத்கம பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்ட அரிசி அங்கு சுத்தப்படுத்தப்பட்டு அளுத்கம, பேருவளை, மகொன பயாகல ஆகிய பகுதிகளில் உள்ள உணவகங்களுக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரியவந்துள்ளது.

(அ)

# ராஜ ராஜ சோழனை இந்து மன்னன் என அழைப்பது சரியா?

**பிரமிளா கிருஷ்ணன்**

**ரா**ஜ ராஜ சோழனுக்கு இந்து அடையாளத்தைக் கொடுக்கிறார்கள் என இயக்குநர் வெற்றிமாறன் பேசியதையடுத்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டை ஆண்ட சோழ மன்னனின் மதம் எது என்பது குறித்த சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரான திருமாவளவனின் 60வது பிறந்தநாளை ஒட்டி நடந்த விழா ஒன்றில் பேசிய திரைப்பட இயக்குனர் வெற்றிமாறன், "திருவள்ளுவருக்கு காவி உடை கொடுப்பது, சோழ மன்னன் ராஜராஜ சோழனை இந்து மன்னனாக அடையாளப்படுத்துவது என தமிழர்களின் அடையாளத்தை பறிக்கிறார்கள்" என பேசியிருந்தார். இதற்குப் பதில் சொல்லும் வகையில் பேட்டியளித்த இயக்குனர் பேரரசு, "ராஜராஜ சோழன் இந்து மன்னன்தான், இந்தியர்கள் அனைவருமே இந்துக்கள்தான்" என்றார்.

## வரலாறு என்ன சொல்கிறது?

இதையடுத்து ராஜ ராஜ சோழனின் மதம் எது என்பது குறித்து சமூக வலைதளங்களில் விவாதங்கள் நடக்க, பெரும்பாலான தமிழ் தொலைக்காட்சிகளின் விவாத மேடைகளை இந்த விவகாரமே பிடித்துக்கொண்டது.

ராஜ ராஜ சோழன் வாழ்ந்த காலத்தையும் இந்து மதத்தின் வரலாற்றையும் ஒப்பிட்டுப் பார்த்துதான் இந்த சர்ச்சையில் பேச வேண்டும் என்கிறார் விவேகானந்தா கல்லூரியின் ஓய்வுபெற்ற வரலாற்று துறை பேராசிரியரான அ. கருணானந்தம்.

"ராஜ ராஜ சோழன் வாழ்ந்த காலம் கி.பி. பத்து மற்றும் பதினொன்றாவது நூற்றாண்டு. இந்து என்ற சொல் முதன்முதலில் பயன்படுத்தபட்ட காலம் ராஜ ராஜ சோழனின் காலத்திற்கு மிகவும் பிந்தைய காலம். ராஜ ராஜ சோழனின் காலத்தில் இந்து என்ற சொல்லாடல் பயன்பாட்டில் இல்லை என்பது உறுதி. இதுவரை கண்டறியப்பட்ட சோழர் காலக் கல்வெட்டு எதிலும், இந்து என்ற சொல் காணக்கிடைக்கவில்லை. தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகள் எதிலும் இந்து என்ற சொல் நேரடியாக மதத்தை குறிக்கும் பொருள் கொண்ட சொல்லாக அந்தக் காலத்தில் அறியப்படவில்லை. அதனால், ராஜ ராஜ சோழன் இந்து மன்னன் என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லை" என்கிறார் கருணானந்தம்.

மேலும், ராஜ ராஜ சோழனின் காலத்தில் சைவ, வைணவ மதங்களே முதன்மை மதங்களாக இருந்தன என்கிறார் கருணானந்தம். "ராஜ ராஜ சோழனின் காலத்தில் சிவனை முழு முதற் கடவுளாக பார்க்கும் சைவ மதம் தழைத்தோங்கி இருந்தது. அப்போது இந்து என்ன மதமே கிடையாது. சைவம், வைணவம்தான் முதன்மையான மதங்களாக இருந்தன. சமணம் மற்றும் பௌத்த சமயங்கள் அந்த காலகட்டத்தில் அழிவை நோக்கி சென்று கொண்டிருந்தன. சைவம், வைணவ மதத்தில் அந்தக் காலத்தில் பல்வேறு பிரிவுகள் இருந்தன. ராஜராஜ சோழன் பின்பற்றிய வழிபாட்டு முறைகள் பாசுபத சைவம் என்ற பிரிவை சேர்ந்ததாக உள்ளன. அதனால், ராஜராஜ சோழன் இந்து மன்னனாக இருந்திருக்கவில்லை" என்கிறார் அவர்.



மேலும், தற்போதைய இந்து மதம் என்ற சொல்லாடலுடன் ராஜ ராஜ சோழன் காலத்தில் இருந்த மதத்தை இணைத்துப் பார்ப்பது தேவையற்றது. அது ஒரு வரலாற்று பிழை என்கிறார் அவர். ""வடமேற்கு திசையில் இருந்து இந்தியாவுக்கு வந்த பாரசீகர்களும் கிரேக்கர்களும் இந்திய நாட்டை அப்போது சிந்து என்று வழங்கினார்கள். அந்த பெயர் சிந்து நதி பகுதியில் வசிப்பவர்கள் என்ற அர்த்தத்துடன் வழங்கப்பட்டது. காலப்போக்கில் சிந்து என்பது, ஹிந்து, இந்து என்று மருவிவிட்டது. சிந்து என்றால் நதி என்று அர்த்தம், ஆனால் இந்து என்ற சொல்லுக்கு எந்த அர்த்தமும் இல்லை. காலப் போக்கில் அரசியல்வாதிகள் இந்து என்பதை மதத்தை குறிக்கும் சொல்லாக மாற்றி விட்டார்கள்" என்கிறார் கருணானந்தம்.

ராஜ ராஜ சோழன் காலத்தில் சிவன் கோவில்களில் பின்பற்றப்பட்ட மதம் சைவ மதம்தான் என்கிறார் "இராஜராஜம்" என்ற நூலை எழுதியுள்ள வெ. ஜீவகுமார்.

"ராஜ ராஜனின் காலத்தில் சிவன் கோயில்களில் பின் பற்றப்பட்ட மதத்தை சைவம் என்றுதான் வழங்கினார்கள். தேவாரம் மற்றும் திருமுறை பாடல்களில் சைவம் என்ற சொல்தான் வழங்கப்படுகிறது. இன்றும்கூட சைவத்தை தனி மதமாக கருதுபவர்கள் இருக்கிறார்கள். சிவலிங்கத்தை மட்டும் வழிபடும் லிங்காயத்துகள் கூட தாங்கள் இந்துக்கள் அல்ல என்றுதான் கூறுகிறார்கள். சைவத்தை போலவே, ராஜ ராஜனின் காலத் தில் சமணமும் பௌத்தமும் பின்பற்றப்பட்டது. வைணவமும் பின்பற்றப்பட்டது. கடவுளை வணங்காமல் வாழ்ந்த சித்தர்களும் இங்கு இருந்திருக்கிறார்கள். தான் சைவத்தை பின்பற்றினாலும், ராஜ ராஜனின் ஆட்சியில் பல மதங்களும் இருந்ததால் ஒரு மதத்தின் மன்னனாக ராஜ ராஜன் அறியப்படவில்லை" என்கிறார் ஜீவகுமார்.

சர் வில்லியம் ஜோன்ஸ் என்ற ஆங்கிலேயர்தான் முதன்முதலில் கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் அல்லாதவர்களை குறிப்பிட இந்து என்ற சொல்லை பயன்படுத்தியதாகச் சொல்கிறார் அவர். "வித விதமான கடவுள்களை வணங்கும் மக்களை, ஒரே பிரிவாகச் சேர்த்து அழைக்க இந்து என்ற சொல்லை ஆங்கிலேயர்கள்தான் குறிப்பிட்டார்கள். சர் வில்லியம் ஜோன்ஸ் 1790களில் சட்டங்களை தொகுக்கும்போது, கிறிஸ்துவர்கள் அல்லாமல், இஸ்லாமியர்கள் அல்லாமல் இருக்கும் ஒரு பெரும் தொகையான மக்களை இந்துக்கள் என்ற பெயரில் வழங்கினார். அது மதத்தின் அடையாளம் அல்ல, ஒரு பெயர் அல் லது குறியீடு மட்டும்தான்" என்கிறார் ஜீவகுமார்.

தற்போதைய வழக்கங்களை வைத்துக்கொண்டு ராஜ ராஜ சோழனை இந்து மன்னன் என்று சொல்வது பிழை என்கிறார் சென்னை பல்கலைக் கழகத்தின் தத்துவம் மற்றும் மத சிந்தனைகள் பிரிவின் பேராசிரியர் சரவணன்.

"இந்து என்ற சொல்லுக்கு தனியாக ஒரு வழிபாட்டு முறையோ கடவுளோ கிடையாது. இந்து என்று சொல்லில் குறிப்பிடுவது வேத காலத்து வழிபாட்டைத்தான். அதாவது வேள்வி நடத்தி வழிபாடு செய்வது. அது சனாதன தர்மத்தை, வர்ணாசிரமத்தை ஆதரிப்பது. அதற்கு முற்றிலும் மாறுபட்டதாகத்தான் தமிழர்கள் பின்பற்றிய மத வழிபாடுகள் இருந்தன. ஒன்பதாம் நூற்றாண்டில் சங்கரர் கூட ஆறு மதங்களைக் குறிக்க ஷன்மதம் என்ற சொல்லை பயன்படுத்தினார். அதாவது, சிவனை வழிபடுவது சைவம், விஷ்ணுவை வழிபடுவது வைணவம், முருகனை வழிபடுவது கௌமாரம், சூரியனை வழிபடுவது சௌரம், கணபதியை வழிபடுவது காணாபதியம், சக்தியை வழிபடுவது சாக்தம் என்று வகைப்படுத்தியுள்ளார். அதனால், தற்போதைய சொல்லாடலை வைத்துக்கொண்டு ராஜராஜ சோழனை இந்து மன்னன் என்று சொல்வது பிழை" என்கிறார் சரவணன்.

மேலும், சைவம் என்ற மதமே இந்து என்ற சொல்லில் மறைக்கப்பட்டது என்கிறார் சரவணன். "திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற தொன்மையான நூல்களில்கூட இந்து என்ற குறிப்புகள் வரவில்லை. அதனால், பிற்காலத்தில் அரசுகளில் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்கள், வேத பிராமணர்கள் உயர்வானவர்கள் என்ற கோட்பாட்டை ஏற்படுத்தினர். பிறகு ஒரு கட்டத்தில், சைவ மதத்தின் முழு முதற் கடவுளான சிவனை பல இந்து கடவுள்களில் ஒருவராக இணைத்தனர். இப்படித்தான் சைவ மதத்தை இந்து என்ற பெயரில் வழங்க ஆரம்பித்து அதனை விழுங்கினர். பின்னர் வைணவத்திற்கும் அதுதான் நேர்ந்தது. சைவத்தை முழுமையாக பின்பற்றுபவர்கள் தாங்கள் இந்துக்கள் என்று தற்போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்" என்கிறார் சரவணன்.



### "ஹிந்துஸ்தானத்தில் இருப்பவர்கள் இந்துக்கள்"

ஆனால், வெற்றிமாறனின் கருத்துக்கு கடுமையான எதிர்வினையாற்றி வருகிறது பாரதிய ஜனதா கட்சி. "சிவன் கோவில் கட்டிய மாமன்னன் என்ன இஸ்லாமியரா அல்லது கிறித்தவரா, பௌத்தரா?" எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார் அந்தக் கட்சியின் முன்னாள் தேசியச் செயலரான எச். ராஜா.

இந்து என்பது ஒரு மதமல்ல, வாழ்க்கை முறை என்பதால், அந்தச் சொல்லை பயன்படுத்துவதில் தவறில்லை என்கிறார் தமிழக பா.ஜ.கவின் மாநில துணைத் தலைவரான நாராயணன் திருப்பதி.

"இந்தியா என்கிற ஹிந்துஸ்தானத்தில் இருப்போர் அனைவரும் இந்துக்கள்தான் என்றே நாம் சொல்கிறோம். சைவமும், வைணவமும் மோதிக் கொண்டதாகவே இருக்கட்டும். அந்த மோதலை தடுத்து, இணைத்தது இந்து என்ற சொல்தானே? குருதிச் சேற்றில் தலைகள் உருண்டதாகவே வைத்து கொள்வோம். அதை தடுத்து, சைவத்தையும், வைணவத்தையும் ஒன்றிணைத்தது "இந்து" என்ற சொல்தானே? அதனால், இந்து என்ற சொல்லை வழங்குவதில் தவறில்லை," என்கிறார் நாராயணன் திருப்பதி.

**(பிபிசி)**

# அடையாளத்தைத் தேடி ‘தேய்ந்துபோகும்’ மலையகம்

வி.தேவராஜ்

> தமிழ்ப் பாடசாலைகள் தென் பகுதிகளில் இல்லாத நிலையில் சிங்களப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்து சிங்கள மொழியில் கல்வி கற்க வைக்கின்றனர். அதாவது தமது எதிர்காலச் சந்ததியினரை சிங்களம் நோக்கி கலந்து கரைந்துப் போக வைப்பதில் முனைப் பாக இருக்கின்றனர்.

மலையக வரலாறு இரு நூற்றாண்டை எட்டியுள்ள நிலையில் மலையகத் தமிழர்கள் தமது அடை யாளம் குறித்த தேடுதலில் இன்றும் உள்ளனர். ஆரம் பத்தில் இந்தியத் தமிழர்கள் என அழைக்கப்பட் டனர். இந்திய வம்சாவளித் தமிழர் என்றும் அழைத் தனர்.

மலையகத் தமிழர் என்பது இன்று பரவலாகப் பேசப்படும் சொற்பதம். இந்தப் பெயர்களில் அரச அங்கீகாரம் ‘இந்தியத் தமிழ்’ என்பதுதான்.

பிறப்புச் சான்றிதழ் முதல் கொண்டு அணைத்து அரச ஆவணங்களிலும் ‘இந்தியத் தமிழ்’ என்பதுதான் பிரகடனப்படுத்தப்பட்ட பெயர். இது இன்று வரை எவ்வித மாற்றமும் இன்றி தொடர்கின்றது.

‘இந்தியத் தமிழ்’ என்பது இந்திய அடையாளத்தின்பாற்பட்டது. இந்தப் பெயருடன் எமக்கு உடன்பாடில்லை எனக் கூறியே ‘மலையகத் தமிழர்’ என்ற சொற்பதம் வலிந்து புகுத்தப்பட்டது. ஆனால் இதற்கான அரச அங்கீகாரம் இதுவரை பெறப்படவில்லை.

**இந்தியாவில் ‘சிலோன்காரன்’**

இதில் விசித்திரம் என்னவெனில் மலையகத்தில் இருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த தமிழர்கள் இந்தியத் தமிழர் என்ற அடையாளத்தடன் அழைக்கப்படவில்லை. அவர்கள் ‘சிலோன்காரன்’ என்றே இந்தியாவில் அழைக்கப்படுகின்றனர்.

மலையகத்தின் ‘ஹெனான்’ என்று ஹட்டனை வரித்துக் கொண்டவர்கள் மலையகத் தமிழர் என்று அழைத்துக் கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டினர். அந்த தலைமுறையைச் சார்ந்தவர்கள் பிரதி அமைச்சராகவும் இருந்தபோதும் இந்த மலையகத் தமிழர் சொற் பதத்திற்கு அரச அங்கீகாரம் பெறுவது குறித்து சிந்திக்கவும் இல்லை செயலில் இறங்கவும் இல்லை. இது மக்கள் மத்தியில் நாம் யார்? தமது அடையாளம் என்ன? என்பது குறித்த குழப்பம் தலைவிரித்தாட காரணமாகியது.

இதனால் பெரும்பாலான மக்கள் தம்மை ‘இலங்கைத் தமிழர்’ என்று ஆவணங்களில் அடையாளப்படுத்திக் கொள்ளத் தொடங்கினர். இந்தப் போக்கு மலையக மாவட்டங்கள் பலவற்றில் சத்தமின்றி அரங்கேறத் தொடங்கியது.

**தென்பகுதியில் சிங்களமயமாகும் மலையகத் தமிழர்**

ஆனால், தென் மாவட்டங்களில் உள்ள மலையகத் தமிழர்கள் தம்மை பெரும்பான்மை இனத்துடன் அடையாளப்படுத்திக் கொள்ளத் தொடங்கினர். கணேசன் அப்புகாமி, கந்தசாமி பண்டா என்று பெயர்கள் மாற்றம் பெறுகின்றன. இதைப் பற்றி அவர்களிடம் வினவினால் அடுத்த சந்ததியாவது பிரச்சினை இன்றி இருக்கும் என்று அப்பாவித்தனமாகக் கூறி தம்மை சமாதானப்படுத்திக் கொள்ளும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பெரும்பான்மை இனத்தவர்களின் பெயர்களை சூட்டத் தொடங்கியுள்ளனர்.

அதேவேளையில் போதிய தமிழ்ப் பாடசாலைகள் தென் பகுதிகளில் இல்லாத நிலையில் சிங்களப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்து சிங்கள மொழியில் கல்வி கற்க வைக்கின்றனர். அதாவது தமது எதிர்காலச் சந்ததியினரை சிங்களம் நோக்கி கலந்து கரைந்துப்போக வைப்பதில் முனைப்பாக இருக்கின்றனர்.

மொத்தத்தில் அரச ஆவணரீதியாக ‘இந்தியத் தமிழர்’ என இருக்கும் அடையாளத்தை ஏற்கும் மனநிலையில் இல்லாத மக்கள் தமது அடையாளத்திற்கான தீர்க்கமான முடிவினை எடுக்க முடியாத நிலையில் திசைமாறி சீரழிந்து கொண்டிருக்கின்றனர்.

வழி காட்ட எவரும் இல்லை. இதுதான் உனது அடையாளம் என கை காட்டியவர்களும் பேசு பொருளாக மட்டுமே ‘மலையகத் தமிழர்’ என்ற பெயரை வைத்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதன் விளைவுதான் மலையகம் இன்றும் தனது அடையாளம் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றது. ஆனால், மக்கள் குழப்பத்தில் இன அடையாளத்தை தொலைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலை தொடருமாக இருப்பின் தேசிய இன விகிதாசாரத்தில் நாம் பேசுகின்ற மலையகத் தமிழர் மிக விரைவில் பூஜ்ஜியத்திற்குள் சென்றுவிடுவர். இதனையே சிங்கள தேசம் எதிர்பார்க்கின்றது. அவர்கள் தமிழர்கள் இல்லாத அல்லது சிங்களவர்களாகிய தமிழர்களையும் இணைத்த சிங்கள தேசத்தையே எதிர்பார்க்கின்றனர். அதனை நோக்கியதாகவே தென்னிலங்கையின் அனைத்து நகர்வுகளும் உள்ளன.

**ஊழல் மோசடிக்குள் மிதக்கும் மலையக தொழிங்சங்க அரசியல் கட்டமைப்பு**

இதனை விரைவுபடுத்துவதாக மலையக தொழிற்சங்க அரசியல் இருக்கின்றது என்பதை பதிவு செய்தாக வேண்டும். மலையக தொழிற்சங்க அரசியல் தோட்டத் தலைவர்களில் இருந்து மாவட்டத் தலைவர்கள் மற்றும் உயர்மட்டத்தினர் வரை ஊழலில் மிதப்பதாக மக்கள் கனல் கக்கும் கோபத்தில் உள்ளனர்.

மலையகம் அடுத்து என்ன? என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று குறித்து தமிழகத்தில் இருந்து ஒருவர் இவ்வாறு கருத்தினைப் பதிவு செய்திருந்தார்.

‘எப்படிப் பார்த்தாலும் நல்ல ஒரு தலைவர் மலையகத்தில் தென்படவில்லையே’ என்ற ஆதங்கத்தைத் தெரிவித்திருந்தார். கம்பளையில் இருந்து ஒருவர் கோபக் கனல் கக்க தெறிக்கவிட்ட எழுத்து இது.

‘மக்கள் மடையர்களாக இருக்கும்வரை அரசியல்வாதிகள் புத்திசாலிகளே’ என பதிவிட்டுள்ளார்.

இந்த இரு பதிவுகளையும் மலையக மக்களுக்காகவும் மலையக தொழிங்சங்க அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் பின்னால் நிற்கும் ‘மலையக படித்தவர்களின்’ முன்பாகவும் வைக்கின்றேன்.

ஏனெனில், இந்த ‘படித்தவர்கள்’ மலையக தொழிங்சங்க அரசியல்வாதிகளை சமூக நலன் நோக்கி வழி நடத்தாது தவறிழைத்துக் கொண்டிருக்கின்றனர். இது மலையக சமூகத்திற்கு செய்யும் கூட்டுத் துரோகமாகும்.

தொழிற்சங்க கட்டமைப்பு இன்று பெரிய மாறுதல்களைக் கண்டுள்ளது. இந்த மாறுதல்களை தொழிங்சங்கத் தலைமைகள் மாத்திரம் அல்ல அவர்களின் பின்னால் நிற்கின்ற ‘மலையக படித்தவர்களும்’ அறிவர். ஆனால், தொழிற்சங்க கட்டமைப்பில் மாறுதல்களை கொண்டு வருவதில் இவர்கள் ஏன் அக்கறை காட்டுகின்றார்கள் இல்லை என்பதுதான் புதிராக இருக்கின்றது.

**கருப்புத் தோல் துரைத்தனம்**

தோட்டத்துறையும் காலனித்துவத்தின் எச்சசொச்சங்களை சுமந்து கொண்டு கருப்புத் தோல் துரைத்தனத்துடன் தோட்டத்துறையை நிர்வகிக்கின்றனர். இதனால் தோட்டத்துறையில் முரண்பாடுகளுக்கு பஞ்சமின்றி கொட்டிக் கிடக்கின்றன.

தற்போது தென்னிலங்கை மக்கள் கோரி நிற்கின்ற ‘சிஷ்டம் சேஞ்’ மலையக தொழிங்சங்க அரசியலிலும் வேண்டும். மலையக மக்கள் இதுவரை தொழிங்சங்க அரசியல் குடும்பங்களையும் அவர்கள் சார்ந்தோரையும் வாழ வைத்தது போதும். மலையக மக்களை வாழ வைப்பதற்கான அரசியலுக்கான பாதையை மக்களே தீர்மானிக்கட்டும். அதற்கு துணையாக மலையக சக்திகளும் சிவில் சமூகமும் திரண்டெழ வேண்டும். ஏனெனில், மலையகம் பரந்து விரிந்தது.

**மலையகம் பரந்து விரிந்தது**

மலையகம் என்பது தோட்டத்துறை சார்ந்த ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தொழிலாளர்கள் மாத்திரம் அல்ல அவர்களுடன் சார்ந்த குடும்ப அங்கத்தவர்களுடன் அவர்களில் தங்கி இருப்போருடன் சுமார் 7 இலட்சம் பேருடைய வாழ்வாதார, அரசியல் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டது.

இதற்கும் அப்பால் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகத்துறை சார்ந்தவர்கள், வேலை வாய்ப்புக்காக கொழும்பு போன்ற நகரங்களுக்கு இடம் பெயர்ந்தவர்கள், வீட்டு வேலை செய்பவர்கள் என பல தரப்பட்டவர்கள் அடங்குகின்றனர். இவர்கள் அனைவர்களின் அடையாளமும் அரசியல் பயணமும் கேள்விக் குறியாக நிற்கின்றது.

பொங்கல் தீபாவளி மாத்திரமல்ல வருடாந்தம் நடைபெறும் கோவில் பூஜைகளும் இவர்கள் ஒன்று கூடும் மையங்களாக தோட்டங்கள் உள்ளன. மலையகத்தைச் சேர்ந்த பெரும்பாலான வர்த்தகர்கள் தமது அடையாளத்திற்காக தோட்டக் கோவில்களை தத்தெடுத்து வைபவங்களை நடத்த தோட்டங்களுக்கு வந்து போவதும் வழமை.

மொத்தத்தில் பேசப்படுகின்ற ‘மலையகம்’ என்பது இந்த மக்களின் வாழ்வுடன் இணைந்த குறியீடு. இந்தக் குறியீட்டைத்தான் சிங்கள தேசம் காணாமல் ஆக்க முயல்கின்றது. அந்த வகையில் தோட்டம் என்பது மலையக மக்களுக்கு ஒரு குறியீடு. அந்தக் குறியீட்டைச் சிதைப்பதே தற்போது வேகமாக நடைபெற்று வருகின்றது.

**சிதைவடையும் பெருந் தோட்டப் பொருளாதாரம்**

தோட்டப் காணிகள் துண்டாடப்படுகின்றன. சிங்களக் குடியேற்றத்திற்காகவும், நகர, மாநகர அபிவிருத்திகளுக்காகவும், காணிகள் கையகப்படுத்தப்படுகின்றன. தோட்டங்களில் வேலையின்மை வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் பெரும்பாலான மலையக இளைஞர், யுவதிகள் கொழும்பு போன்ற நகரங்களுக்கு வேலையாட்களாக அதாவது வேறு சமூகங்கள் செய்ய முன்வராத கண்ணியம் குறைந்த வேலைவாய்ப்புகளில் உள்வாங்கப்படுகின்றனர். இது மலையக வாக்கு வங்கியில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தவல்லன. இது தொடர்ந்தால் இன்றைய தொழிற்சங்க அரசியலும் கேள்விக் குறியாகும்.

மலையக அரசியல் என்பது சிங்கள அரசியலின் எச்சங்களாக மாறிவிடும் (இதில் இருந்து மீட்சிபெற மலையக சமூகம் தனக்குத்தானே புதிய இரத்தத்தைப் பாய்ச்சிக் கொண்டு புதுப் பிரசவம் எடுக்க வேண்டும்).

**திராவிட செல்வாக்கை தடுத்து நிறுத்தினர்**

மலையகம் 1960களில் திராவிட செல்வாக்கால் அதிகம் ஈர்க்கப்பட்ட பகுதியாக இருந்தது. ஈவேராவின் சீர்திருத்தக் கருத்துக்களால் உயிரூட்டப்பட்ட மலையகம் அது.

மலையகத்தை நோக்கிய இந்தத் தமிழக அலை சிங்கள ஆட்சியாளர்களை கிலி கொள்ள வைத்தது. இந்த பின்னணியிலேயே தமிழக பிரசுரங்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டன. உள்ளூர் பிரசுரங்களை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் எழுத்தாளர்களை வளர்த்தெடுப்பதற்குமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென ஆட்சியாளர் தரப்பில் கூறப்பட்டது.

இது அவ்வேளையில் சரியான தீர்மானமாகவே பார்க்கப்பட்டது. இலங்கையின் தமிழ் இலக்கிய எழுத்துத்துறை உலகில் புதிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது என்பது உண்மையே. ஆனால், சிங்கள ஆட்சியாளரின் நகர்வு வேறுவிதமாக இருந்தது.

அதேவேளையில் சுதந்திர இலங்கையில் பிரஜா உரிமை சட்டத்தின் மூலம் அரசியல் அநாதைகளாக்கப்பட்ட மக்களுக்காக நியமன எம்பி பதவியை மலையகத் தலைமைகளுக்கு வழங்க சிங்கள ஆட்சியாளர்கள் முன்வந்தனர். ஏ.எம்.அஸீஸ், எஸ்.தொண்டமான் ஆகியோருக்கு நியமன எம்பி பதவி வழங்கப்பட்டன. இது கூட மலையகத்தை நோக்கிய தமிழக அலையை தடுத்து நிறுத்தும் சிங்கள ஆட்சியாளர்களின் நகர்வாகும். இதில் சிங்கள ஆட்சியாளர்கள் வெற்றியும் பெற்றனர்.

தமிழகத் தொடர்புகளை தடுத்து நிறுத்துவதில் வெற்றி கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் மலையக மக்களை ‘இந்தியத் தமிழர்’ என்ற சொற்பதத்துக்குள்ளேயே வைத்திருந்தனர். இன்றும் அதே சொற்பதமே தொடர்கின்றது.

இந்தச் சொற்பதத்தால் பெருமிதம் அடையும் மலையகத் தமிழர்களும் உள்ளனர். இந்த அடையாளம் இலங்கை மண்ணில் தம்மை அந்நியப்படுத்துகின்றது என்ற உணர்வுகளால் வேதனையில் வெந்து சாவோரும் உள்ளனர். இந்த மனப் போராட்டமே மலையகத் தமிழர் என பேச வைக்கின்றது. ஆனால், மலையகத்துக்கான அடையாளம் இன்றும் பேசு பொருளாகவே உள்ளது.




மலையகம் தமது அடையாளத்துக்காக இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும். இதற்கு விரைந்து விடை காணப்பட வேண்டும். விரைந்து முடிவுக்கு வராவிடில் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் மலையகத் தமிழினத்தின் தலைவிதி மாற்றப்படுவதை தடுத்து நிறுத்த முடியாது போய்விடும்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

07.10.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

07.10.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நான்கு கல்முனை மீனவர்களை பத்து நாட்களாக காணவில்லை!

## தேடுதல் நடவடிக்கை மந்த கதியில்

அம்பாறை,ஒக்.07

**கல்முனையில் இருந்து கடலுக்கு சென்ற மீனவர்களை 11 நாட்களாக காண வில்லை என கல்முனை மீனவர் சங்கம் தெரிவித்துள்ளது.**



கடலுக்குச் சென்று காணாமல்போன மீனவர் களின் குடும்பங்களுக்கு தற்காலிகமாக வாழ்வா தாரத்தைக் கொண்டு செல்வதற்கு ஏதாவது கொடுப்பனவையோ அல்லது நஷ்டஈட்டையோ பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை துறையில் இருந்து ஆழ்கடல் இயந்திரப் படகு ஒன்றில் இருந்து கடந்த மாதம் 29ஆம் திகதி மாலை புறப் பட்டுச் சென்ற 4 மீனவர்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரின் கவனத்திற்கு மீனவர் சங்கத்தினர் கொண்டு வந்திருந்தபோதிலும் தேடுதல் நடவடிக்கை மந்த கதியில் இடம்பெற்று வருவதாக காணாமல்போன படகு உரிமையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொலிஸ், கடற்படை உள்ளிட்ட தரப்பினருக்கு மீனவர் சங்கம் இது தொடர்பாக அறிவித்துள்ள போதும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், தற்போது, மீனவர் சங்கங்கள் தேடுதல் நடவடிக் கையை முடுக்கிவிட்டுள்ளன. (அ)

# பாலமுனை கடற் பகுதியில் இயந்திரத்துடன் படகு மீட்பு!



அம்பாறை, ஒக். 07

இயந்திரத்துடன் இணைந்த படகு ஒன்று நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை மீட்கப்பட்டு சாய்ந்த மருது கடற்கரைப்பகுதிக்கு இழுத்து வரப்பட்டுள்ளது.

குறித்த படகு பாலமுனை கடற் பகுதியில் அநாதர வாக காணப்பட்டதை அடுத்து படகு குறித்து கிடைக் கப்பெற்ற தகவலுக்கு அமைய சாய்ந்தமருது பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த கடல் பகுதியில் தொழில் செய்துவரும் மீன வர் ஒருவர் குறித்த படகு கைவிடப்பட்டுள்ளதை இனம் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் படகை மீட்டனர்.

சாய்ந்தமருது பொலிஸ் குழுவினர் கரையொதுங் கிய படகு குறித்து விசாரணையை மேற்கொண்டுள் ளனர். குறித்த படகில் மீனவர்களோ எந்தவித கடற் சாதனங்களோ இருக்கவில்லை என தெரிவிக்கப்பட் டது. (அ)

# "ஒளிரும் கல்முனை" வேலைத்திட்டம்



அம்பாறை, ஒக். 07

தேசிய காங்கிர சின் இளைஞர் அமைப் பாளரும், அல்- மீஸான் பௌண்டஷன் இணைப்பாளருமான கல்முனை மாநகர சபை உறுப்பினர் சமட் ஹமீ டின் எண்ணத்தில் உதித்த "ஒளிரும் கல் முனை" வேலைத்திட் டம் கடந்த பல மாதங் களாக மருதமுனை, பாண்டிருப்பு, பெரிய நீலாவணை போன்ற பிரதேசங்களில் முன் னெடுக்கப்பட்டு வரு கின்றது.

பல மாதங்களாகவும், வருடக்கணக்கிலும் ஒளி ராமல் இருக்கும் தெரு மின்விளக்குகளை மீள ஒளிரச் செய்யவும், புதிதாக மின்விளக்குகளை பொருத்தவும் மாநகர சபை உறுப்பினர் சமட் ஹமீட் "ஒளிரும் கல் முனை" வேலைத்திட்டத்தினூடாக நடவடிக்கை எடுத்து வருகின்றார். (அ)

# கடலில் காணாமல்போனவர்களை தேடும் நடவடிக்கையை துரிதமாக்குக!

## பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கோரிக்கை



அம்பாறை, ஒக். 07

கல்முனை பிரதே சத்திலிருந்து 11 நாட் களுக்கு முன்னர் மீன் பிடிப்பதற்காக கட லுக்கு தொழிலுக்கு சென்று காணாமல் போன நான்கு மீனவர் களை தேடும் நடவ டிக்கையில் மீன்பிடி அமைச்சு மற்றும் திணைக்கள அதிகாரிகள், இலங்கை கடற்படை, இந்திய கரையோர காவல்படை என்பன ஈடுபட நடவடிக்கை எடுக்கு மாறு சம்பந்தப்பட்ட அதிகாரி களை கொழும்பில் சந்தித்து கலந் துரையாடி உள்ளதாக கல்முனை தொகுதி பாராளுமன்ற உறுப்பி னரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள் ளார்.

மேலும், மீனவர்களின் பாதுகாப்பு நில வரம் தொடர் பில் விளக்கி தேடு தல் பணியை முடுக்கிவிடு மாறு அதிகாரிகளை கேட்டுக்கொண் டுள்ளதாகவும் இதனடிப் படையில் மீனவர்களை தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட் டுள்ளதுடன் மீனவர்களை தேடிக் கண்டுபிடித்து பாதுகாப் பாக கரைக்கு அழைத்து வர மீன்பிடி அமைச்சு மற்றும் திணைக்கள அதிகாரிகள், இலங்கை கடற்படை என்பன நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# விக்னேஸ்வராவில் வித்தியாரம்ப விழா



அம்பாறை, ஒக். 07

காரைதீவு விக்னேஸ்வரா வித்யால யத்தில் நவராத்திரி விழாவின் ஏடு தொடங்கல் வித்யாரம்ப விழா நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்றது.

வித்தியாலயஅதிபர் திருமதி தேவ கௌசல்யா குலேந்திரன் தலைமை யில் நடைபெற்ற வித்தியாரம்ப விழாவில் புதிய மாணவர்களுக்கு, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஏடு தொடங்கி வித்தியாரம்பம் செய்து வைத்தார் .

விழாவில் பாடசாலை அபிவிருத் திச் சங்க செயலாளரும், காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து சிறப்பித்தார். (அ)

# கல்முனை விகாராதிபதியின் பிணைக்காக கையெழுத்திட்டோரின் வீடு மீது தாக்குதல்!





அம்பாறை, ஒக். 07

கல்முனை விகாராதிபதியின் பிணைக்கு கையொப் பம் இட்டவர்கள் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோக குற்றசாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த கல்முனை சுபத்ரா ராமய விகாரையின் விகாராதிபதி ரன்முத்துகல சங்க ரத்ன தேரருக்கு கல்முனை நீதவான் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை பிணை வழங்கியது.

இருப்பினும் அதற்கான ஆவணங்களை சமர்ப்பிப் பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கடந்த செவ்வாய்க் கிழமை காலை மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

3 தனித்தனி வழக்குகளுக்கான தலா 3 பேரின் 5 லட்சம் படி 9 பேரின் சரீர பிணையில் அவர் செவ் வாய்க்கிழமை காலை விடுதலை செய்யப்பட்டார்.

பிணைக்கு ஒப்பமிடுவதில் ஏற்பாட்டாளராக இருந்து செயற்பட்டு ஒப்பமிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேக ரன் ராஜன் சிறைச்சாலைக்கு சென்று அவரை அழைத்து வந்து விகாரையில் உள்ள பொலிஸாரிடம் ஒப்படைத் தார்.

நேற்று முன் தினம் மாலை அப்பகுதியிலுள்ள வீடுகளில் இடம்பெற்ற வாணிவிழா பூசைகளிலும் அவர் கலந்து கொண்டார்.

இந்நிலையில் அன்று நள் ளிரவு 12 மணியளவில் இத்தாக் குதல் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதல் நடந்தவேளை அப்பகுதி மக்கள் 119 அவசர பொலிஸ் பிரிவுக்கு அறிவித்தும் மறுநாள் பகல் வரை யாரும் அங்கு வரவில்லை என்று உறுப்பினர் ராஜன் தெரிவித்தார்.

கல்முனை 01 சி பகுதியில் அமைந்துள்ள முஸ் லிம் குடியேற்ற தொடர்மாடி குடியிருப்புப் பகு திக்கு முன்னால் உள்ள 2 பேரின் வீட்டின் மீதே வாள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தப் பட் டுள்ளது.

மயில்வாகனம் முத்துலெட்சுமி மற்றும் ஹர் சன் டி சில்வா ஆகியோரின் வீடுகளே சேதமாக் கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ)

# இந்திய தயாரிப்பு இருமல் மருந்தால் பறிபோனது 66 குழந்தைகளின் உயிர்!

## காம்பியா நாட்டில் பரிதாபச் சம்பவம்

நியூயோர்க், ஒக். 07

இந்தியாவில் தயாரான இருமல் சிரப்பை குடித்த 66 காம்பியா குழந்தைகள் பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் உள்ள மருந்து நிறுவனங்களில் பல வேறு விதமான அத்தியாவசிய மருந்துகள் தயாரிக்கப்படும் நிலையில் அவை உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அவ்வாறாக காம்பியா நாட்டுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான இருமல் சிரப்பை குடித்த 66 குழந்தைகள் பலியான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வகத்தில் இருமல் சிரப்பை ஆராய்ந்தபோது, அதில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாக டை எதிலின் க்ளைகால் மற்றும் எத்திலின் க்ளைகால் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து ஏற்றுமதியான Promethazine Oral Solution, Kofexmalin Baby Cough Syrup, Makoff Baby Cough Syrup, Magrip N Cold Syrup என்ற இந்த 4 சிரப்புகளிலும் வேதியியல் பொருட்கள் நிர்ணயித்த அளவை விட அதிகமாக கலந்திருந்தது தெரிய வந்துள்ளது. இந்த சிரப்புகளை ஹரியானாவை சேர்ந்த மெய்டன் பார்மசூட்டிக்கல் நிறுவனம் தயாரித்துள்ளது.

இதுகுறித்து இந்திய மருந்து தர நிர்ணய ஆணையம் மற்றும் மெய்டன் மருந்து நிறுவனத்துக்கு உலக சுகாதார அமைப்பு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ)



# செச்சினிய தலைவருக்கு கேணல் ஜெனரல் பதவி!

மொஸ்கோ, ஒக். 07

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் கூட்டாளியும் செச்சினிய பிராந்தியத்தின் தலைவருமான ரம்ஜான் கதிரோவ் கடந்த புதன்கிழமையன்று, ரஷ்ய இராணுவப் படிநிலையில் மூன்றாவது மிக உயர்ந்த பதவியான கேணல் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டதாகக் கூறினார்.

"ரஷ்யாவின் ஜனாதிபதி எனக்கு கேணல் ஜெனரல் பதவியை வழங்கினார். இது எனக்கு ஒரு பதவி உயர்வு" என்று டெலிகிராமில் கதிரோவ் கூறினார்.

"எனது தகுதிகளை உயர்வாகப் பாராட்டியதற்காக எங்கள் உச்ச தளபதிக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்! இது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கவுரவம். நான் முன்வைத்த நம்பிக்கையை நியாயப்படுத்துவேன் என்று என் வார்த்தையைத் தருகிறேன்," என்று அவர் மேலும் கூறினார்.

உக்ரைனில் குறைந்த சக்தி கொண்ட அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ளுமாறு மொஸ்கோவை வலியுறுத்திய சில நாட்களுக்குப் பிறகு கதிரோவ் பதவி உயர்வு பெறுகிறார்.

"எனது தனிப்பட்ட கருத்துப்படி, எல்லைப் பகுதிகளில் இராணுவச் சட்டம் மற்றும் குறைந்த மகசூல் கொண்ட அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது வரை இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" என்று கதிரோவ் டெலிகிராமில் எழுதினார்.

மேலும், உக்ரைன் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து ரஷ்ய துருப்புக்களை பின்னுக்குத் தள்ளியதும், கோபமடைந்த கதிரோவ், தனது மூன்று மகன்களான அக்மத் (வயது-16), எலி (வயது-15) மற்றும் ஆடம் (வயது-14) ஆகியோரை போர்க்களத்தில் ரஷ்யாவுக்காக போரிட அனுப்புவதாகக் கூறினார்.

"உண்மையான சண்டையில் தங்களை நிரூபிக்க வேண்டிய நேரம் இது, இந்த ஆசையை மட்டுமே நான் வரவேற்க முடியும். விரைவில் அவர்கள் முன் வரிசையில் செல்வார்கள், மேலும் தொடர்பு வரிசையில் மிகவும் கடினமான பிரிவுகளில் இருப்பார்கள்" என்று செச்சினிய தலைவர் கூறினார்.

செச்சினியாவின் காகசஸ் பிராந்தியத்தின் செல்வாக்கு மிக்க ஆட்சியாளரான கதிரோவ், உக்ரைனில் நடக்கும் போரில் அடிக்கடி கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். செச்சினிய படைகள் அங்குள்ள ரஷ்ய இராணுவத்தின் முன்னணிப் படையின் ஒரு பகுதியாக உள்ளது.

கதிரோவ் புடினுக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கமானவர் என்று பரவலாக நம்பப்படுகிறது. புடின் 2007 இல் அமைதியான செச்சினியாவை ஆளுவதற்கு கதிரோவை நியமித்தார். (அ)



# குழந்தை பராமரிப்பு மையத்தில் ஆயுததாரி ஒருவர் துப்பாக்கி சூடு!

## குழந்தைகள் உட்பட 31 பேர் பலி

பாங்கொக், ஒக்.07

தாய்லாந்தின் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் சுமார் 31 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் குழந்தைகளும் பெரியவர்களும் அடங்குவர் என்று பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் உலகளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் முன்னாள் பொலிஸ் அதிகாரி என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த நபரை கைது செய்வதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இது குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ள தாய்லாந்து பிரதமர் இது குறித்து உடனடியாக விசாரணை நடத்த அனைத்து விசாரணை அமைப்புகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது தாய்லாந்தில் துப்பாக்கி வைத்திருப்பவர்களின் விகிதம் அதிகமாக உள்ளது. ஆனால், சட்டவிரோத ஆயுதங்கள் அதிக எண்ணிக்கையில் இல்லை என அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# மெக்சிக்கோவிலும் சூடு 18 பேர் உயிரிழந்தனர்!

மெக்சிக்கோ சிற்றி, ஒக். 07

மெக்சிக்கோவின் தென் மேற்கு பகுதியில் சான் மிகுவல் டோடோலாபன் என்ற நகரில் உள்ள கட்டடம் ஒன்றின் மீது மர்ம நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், அந்த கட்டடத்தில் இருந்தவர்களில் 18 பேர் வரைக் கொல்லப்பட்டுள்ளனர்.

குறித்த மர்ம கும்பல் நடத்திய இந்த வெறித்தனமான துப்பாக்கி சூட்டில் மெக்சிக்கோ மேயர் கான்ராடோ மெண்டோசா மற்றும் அவரது தந்தையும், முன்னாள் மேயருமான ஜூவான் மெண்டோசா பொலிஸ் அதிகாரிகள் உட்பட 18 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். இதில் சில அரசு ஊழியர்களும் உயிர் இழந்தனர். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்த நிலையில், அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு லாஸ் டெக்வலிரோஸ் என்ற அமைப்பு பொறுப்பேற்று உள்ளது. ஆனால் இதனை மெக்சிகோ அதிகாரிகள் உறுதிபடுத்தவில்லை.

இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தை மர்ம கும்பல் படமெடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள நிலையில் அவை தற்போது வைரலாக பரவி வருகிறது

இந்த சம்பவத்தை தொடர்ந்து மெக்சிக்கோவில் பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக் கும்பலைப் பிடிக்க அதிரடி வாகன சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

மேயர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு அவரது கட்சி கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. (அ)



# அமெரிக்காவில் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டது இந்திய இளம் குடும்பம்!

கலிபோர்னியா, ஒக். 07

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 8 மாத குழந்தை உட்பட 4 இந்தியர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கலிபோர்னியாவில் உள்ள மெர்சிட் கவுண்டியில் இருந்து கடத்தப்பட்ட நான்கு இந்தியர்களில் 36 வயதான ஜஸ்தீப் சிங், அவரின் மனைவி 27 வயதான ஜஸ்லீன் கவுர் மற்றும் அவர்களது 8 மாத குழந்தை அரூஹி தேரி, அவர்களின் உறவினரான 39 வயதான அமந்தீப் சிங் ஆகியோரே கடத்தப்பட்டுள்ளனர் என்று மெர்சிட் கவுண்டி பொலிஸ் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆயுதம் ஏந்திய நபர் ஒருவர் துப்பாக்கி முனையில் நால்வரையும் கடத்திச் சென்றுள்ளார் என்று கூறப்படுகிறது.

விசாரணை இன்னும் ஆரம்ப கட்டத்தில் இருப்பதால் இந்த சம்பவம் பற்றி அதிக விவரங்கள் வெளியிடப்படவில்லை. எனினும் ஒரு வணிக வளாகம் அருகிலிருந்து அவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்று மட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் ஒருவரின் புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

கலிபோர்னியா பகுதியில் இந்திய வம்சாவளியினர் அடிக்கடி கடத்தப்படுவது, மாயமாகுவது போன்ற சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. கடந்த 2019ல்,




டிஜிட்டல் மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளராக இருந்த இந்தியர் ஒருவர் கலிபோர்னியாவில் தனது ஆடம்பரமான வீட்டில் இருந்து கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட சில மணிநேரத்தில் தனது காதலியின் காரில் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

## இருபது - 20 போட்டியில் இரட்டை சதம் அடித்த வீரர்!

அட்லாண்டா, ஒக். 07

இருபது - 20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் ரஹீம் கோர்னவெல் இரட்டைச் சதம் அடித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெறும் அட்லாண்டா ஓப்பன் என்ற இருபது - 20 போட்டியிலேயே அவர் இரட்டைச் சதமெடுத்து அசத்தியுள்ளார்.

அட்லாண்டா பயர் அணியில் விளையாடும் கோர்ன்வெல், 77 பந்துகளில் 22 சிக்ஸர்கள், 17 பௌண்ட்ரிகளுடன் ஆட்டமிழக்காமல் 205 ஓட்டங்களை எடுத்தார்.

இதனால் அட்லாண்டா அணி 20 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 326 ஓட்டங்கள் குவித்தது. கடினமான இலக்கை விரட்ட முடியாமல் ஸ்கொயர் டிரைவ் அணி 172 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது.

29 வயது கோர்ன்வெல் இன்னும் மே.இ. தீவுகளின் வெள்ளைப் பந்து அணிக்குத் தேர்வாகவில்லை. இது வரை 9 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

ஐ. சி. சியால் அங்கீகரிக்கப்படாத போட்டியில் கோர்ன்வெல் இந்த இரட்டை சதத்தை எடுத்ததால் இது சாதனைப் பட்டியலில் இடம்பெறாது.



## மேற்கிந்தியாவுடனான ரி- 20; அவுஸ்திரேலியா இலகு வெற்றி!

குயின்ஸ்லாந்து, ஒக். 07

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு 2 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகிறது.

இந்தியாவுக்கு எதிரான இருபது - 20 தொடரை இழந்த பின அவுஸ்திரேலிய அணி சொந்த மண்ணில் விளையாடுகிறது.

முதல் இருபது - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.

இதன்படி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 145 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் சார்பில் அதிகபட்சமாக கைல் மேயர்ஸ் 39 ஓட்டங்கள் எடுத்தார்.

அவுஸ்திரேலியா அணியின் சார்பில் அதிகபட்சமாக ஜோஷ் ஹசல்வூட் 3 விக்கெட்களும், மிட்செல் ஸ்டார்க் மற்றும் பட் கம்மின்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர். 146 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 19.5 ஓவரில் 7 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் சார்பில் அதிகபட்சமாக அணித் தலைவர் அரோன் பின்ஞ் 58 ஓட்டங்களும், மத்தியூ வேட் 39 ஓட்டங்களும் எடுத்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சார்பில் அதிகபட்சமாக ஷெல்டன் காட்டெரல் மற்றும் அல்சாரி ஜோசப் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதன்மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் இருபது- 20 போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது.

இதன்படி 2 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் 1-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா அணி முன்னிலை பெற்றுள்ளது. (ஐ)




# ஜாம்பவான்களின் கிரிக்கெட் லீக் இந்தியா கப்பிட்டல்ஸ் சம்பியன்!

ஜெய்பூர், ஒக். 07

ஜாம்பான்களின் லீக் கிரிக்கெட் போட்டியில் பில்வாரா கிங்ஸ் அணியை வீழ்த்தி இந்தியா கப்பிடல்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

ஓய்வு பெற்ற முன்னாள் வீரர்கள் பங்கேற்கும் ஜாம்பவான் லீக் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடைபெற்று வந்தது. இந்த தொடரின் இறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் இரவு ஜெய்பூரில் நடைபெற்றது.

இந்த இறுதி ஆட்டத்தில் கௌதம் கம்பீர் தலைமையிலான இந்தியா கப்பிடல்ஸ் அணியும், இர்பான் பதான் தலைமையிலான பில்வாரா கிங்ஸ் அணியும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா கப்பிடல்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 211 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியில் அதிகபட்சமாக ரோஸ் ரெய்லர் 82 ஓட்டங்களும், ஜோன்சன் 62 ஓட்டங்களும், நர்ஸ் 19 பந்துகளில் 42 ஓட்டங்களும் அடித்தனர்.

பில்வாரா கிங்ஸ் அணி தரப்பில் ராகுல் சர்மா 4 விக்கெட்கள் வீழ்த்தினார். அடுத்து 212 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பில்வாரா கிங்ஸ் அணி களம் இறங்கியது.

இறுதியில் அந்த அணி 18.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 107 ஓட்டங்களை எடுத்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக வற்சன் 27 ஓட்டங்களும், ஜேசல் காரியா 22 ஓட்டங்களும் அடித்தனர். இந்தியா கப்பிடல்ஸ் அணி தரப்பில் பவான் சுயல், பிரவீன் தம்பே, பங்கஜ் சிங் தலா 2 விக்கெட்டும், மிற்செல் ஜோன்சன், லியாம் பிளெங்கட், ரஜத் பாடியா தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதன் மூலம் இந்தியா கப்பிடல்ஸ் அணி 104 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

## நேபாள வீரர் சந்தீப் லமிச்சனே விமான நிலையத்தில் கைது!

காத்மண்டு, ஒக். 07



நேபாள அணியின் முன்னாள் அணித் தலைவர் சந்தீப் லமிச்சனே நேற்று வியாழக்கிழமை காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேபாள கிரிக்கெட் அணிக்காக விளையாடியவர் சந்தீப் லமிச்சனே. இவர் இதுவரை 30 சர்வதேச ஒருநாள் மற்றும் 44 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். ஐ. பி. எல். தொடரில் பங்கேற்ற முதல் நேபாள வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் சந்தீப் லமிச்சனேமீது 17 வயது சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வு குற்றச்சாட்டு அளித்துள்ளார். அதில், நண்பர் ஒருவர் மூலம் சந்தீப்பின் அறிமுகம் தமக்கு கிடைத்ததாகவும், இதனையடுத்து ஓகஸ்ட் 21ஆம் திகதி காத்மாண்டு ஹோட்டல் ஒன்றில் தம்மை சந்தீப் அறைக்கு அழைத்து பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்றும் கூறியுள்ளார். இதனையடுத்து சந்தீப்மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனை அடுத்து சந்தீப்புக்கு காத்மாண்டு மாவட்ட நீதிமன்றம் கைது உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்நிலையில், முழுவிசாரணையும் நிறைவடையும் வரை நேபாள கிரிக்கெட் சபை சந்தீப்பை இடைநிறுத்தியுள்ளது.

சி. பி. எல். போட்டியில் பங்கேற்பதற்காக மேற்கிந்தியா சென்ற சந்தீப் நாடு திரும்பும்போது கைது செய்யப்படலாம் என்று கூறப்பட்ட நிலையில் நேற்று நாடு திரும்பிய அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

## முதலிடத்தை நெருங்கும் இந்தியாவின் சூர்யகுமார்!

டுபாய், ஒக். 07



ஆண்களுக்கான இருபது - 20 துடுப்பாட்ட தரவரிசையை ஐ. சி. சி. நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

இதில் இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ் 838 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் நீடிக்கிறார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக சமீபத்தில் நடந்து முடிந்த 2ஆவது இருபது - 20 போட்டியில் சூர்யகுமார் யாதவ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இருப்பினும் செவ்வாய்க்கிழமை நடந்த 3ஆவது இருபது - 20 போட்டியில் சோபிக்க தவறியதால் அவர் முதல் இடத்தை நூலிழையில் தவறவிட்டுள்ளார்.

இந்த தரவரிசையில் முகமது ரிஸ்வான் 854 புள்ளிகள் உடன் முதல் இடத்தில் இருக்கிறார். ரிஸ்வான்-சூர்யகுமார் ஆகியோருக்கு இடையே 16 புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் உள்ளது. 3ஆவது இடத்தில் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் (801 புள்ளிகள்) உள்ளார். இந்திய வீரர்களில் சூர்யகுமார் யாதவை தவிர வேற எந்த இந்திய வீரரும் முதல் 10 இடங்களுக்குள் இல்லை. (ஐ)

# கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏடு தொடக்கும் வைபவம் திருகோணமலையில்

திருமலை, ஒக். 07

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி விழா வின் இறுதிநாள் விழாவும், ஏடு தொடங்கி வைக்கும் நிகழ்வும் நேற்று முன் தினம் மாகாண பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்கா ளர் ச.நேசராஜா கலந்துகொண்டு சிறப்பித்தார்.

திருகோணமலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆல யத்தின் பிரதம குரு சிவஸ்ரீ சாந்தமூர்த்தி குருக்களி னால் இறுநாள் நவராத்திரியின் விஷேட பூசை வழி பாடுகள் இடம்பெற்றதையடுத்து, மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச.நேசராஜா மற்றும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் ஆகி யோரினால் ஏடு தொடங்கி வைக்கப்பட்டு, அச் சிறு வர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கினர்.

இந்நிகழ்வின்போது, இரட்ணம் சஞ்சு சியாமலி - சகோதரிகளின் வீணை இசையும், திருகோணமலை ஆனந்த பிரகதீஸ்வரா கலாலய மாணவர்களின் நட னமும் நிகழ்ச்சியும் இடம்பெற்றதும்



குறிப்பிடத்தக்கது.

இதில் திணைக்களத்தின் காலாச்சார உத்தியோகத் தர்கள், ஊழியர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ)

# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சிறுவர்கள், முதியோர் தின வைபவம்

அம்பாறை, ஒக். 07

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வும் சாதனையாளர்கள் பாராட்டு நிகழ்வும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம்.ஆஷிக் தலைமையில் நேற்று முன் தினம் புதன்கிழமை தனியார் மண்டபத் தில் இடம் பெற்றது. இந்நிகழ்வுக்கு அம் பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம்.ஏ. டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் அண்மையில் வெளி யான க.பொ.உயர்தரப் பரீட்சையில் அம்பாறை மாவட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப் பட்ட 06 மாணவர்களுக்கும், புலமைப் பரீட்சையில் அம்பாறை மாவட்டத்தில் முதலாம் இடம் பெற்ற ஒரு மாணவ னுக்கும் பிரதம அதிதியால் நினைவுப் பரிசில்கள் வழங்கப் பட்டன. மேலும் சமுர்த்தி சிப்தொறா புலமைப் பரிசில்கள் பெற்று பல் கலைக்கழகத்துக்கு தெரி வான 12 மாணவர்களுக் கும், சமுர்த்தி பயனாளி குடும்பங்களில் உள்ள தெரிவு செய்யப் பட்ட 12 மாணவர்களுக்கும் அன்ப ளிப்பு பொருட்களும், பாடசாலை உபகரணங் கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் 45 முதி யோர் சங்க அங்கத்தவர்களுக்கும், சமுர்த்தி சங்கத்தில் நீண்ட காலமாக அங்கத்தவர்களாக அரும்பணியாற்றிய17 முதியோர்களுக்கும் அதிதிகளால் நினை வுப்பரிசில்களும், அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.



நிகழ்வில் அம்பாறை மாவட்ட அர சாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் மற் றும் மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெக தீசன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, நினை வுச் சின்னம் வழங்கி பிரதேச செய லாளர் எம்.எம். ஆஷிக்கினால் கௌரவிக் கப்பட்டனர். (அ)

## தங்கம் வென்று சரித்திரம் படைத்த நிந்தவூர் அல் -அஷ்றக் பாடசாலை

அம்பாறை, ஒக். 07

மாகாண மட்ட தமிழ் தினப் போட்டியின் முஸ்லிம் நிகழ்ச்சி யில் வரலாற்றில் முதல் முறையாக நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை தங்கப்பதக்கம் வென்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

அத்தோடு, இப்பாடசாலை 2014 ஆம் ஆண்டின் பின் சிறு கதை ஆக்கப் போட்டியிலும் மாகாணத்தில் தங்கப்பதக்கம் வென்று தேசிய மட்டப் போட் டிக்கு தெரிவு செய்யப்பட்டுள் ளது.

மேலும் வரலாற்றில் முதல் முறையாக மாகாண மட்ட தமிழ றிவு வினா - விடைப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்று சாதனை நிலை நாட்டியுள்ளது. (அ)

# இராமகிருஷ்ண மிஷன் அறநெறி வாணி விழா மட்டக்களப்பில்





மட்டக்களப்பு, ஒக். 07

இராமகிருஷ்ண மிஷனின் அறநெறிபாடசாலை வாணி விழா மட்டக்களப்பு, கல்லடி சுவாமி விபுலானந்த மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் கல்லடி குருகுல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் தலைமையில் விழா நடைபெற்றது.

பிரதம அதிதியாக மட்டக்க ளப்பு மாவட்ட அரசாங்க அதிப ரும் சிவானந்தா பழைய மாணவரு மான க.கருணாகரன் கலந்து சிறப்பித்தார்.

இலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் எனும் காணொளிக்காட்சி இடம்பெற்றது.

அறநெறிப் பாடசாலை அதிபர் க. மதிவண்ணன் நன்றி உரையாற்றினார். (அ)


## இலங்கைக்கான கல்வி மேம்பாட்டு மன்றம் ‘கல்விச் சுடர்’

இலங்கையிலுள்ள முன்பள்ளி முதல் பல்கலைக் கழகங்கள் வரை பயின்று கொண்டிருக்கும் மாணவர் களின் நலன்கருதி **கல்விச் சுடர்** என்ற பெயரில் மாதாந்த மின்னிதழ் ஒன்று விரைவில் வெளியாகவிருக் கின்றது. தமிழ், ஆங்கில மொழிகளிலான ஆக்கங்கள் இந்த சஞ்சிகையில் இடம்பெறும்.

- இலங்கையில் கல்வித் துறையில் காணப்படும் குறைபாடுகள், கல்வி விருத்திக்காக மேற்கொள்ளப்படுவரும் செயற்பாடுகள், கல்விச் சீர்திருத்தங்கள், புதிய போக்குகள், அணுகு முறைகள் பற்றிய தகவல்கள்.
- மாணவர்களது தொழிற் கல்வி மற்றும் தொழில் வாய்புகள் சம்பந்தப்பட்ட தகவல்கள்.
- அதிபர், ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்.
- மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான கல்விசார் வழிகாட்டுதல்கள்.
- தனியார் கல்வி நிறுவனங்கள், அவற்றின் கல்வி போதனைகள்.
- கல்வி மேம்பாட்டுக்கு அரச மற்றும் புலம் பெயர் சமூக நிறுவனங்கள் வழங்கிவரும் நிதியுதவிகளும் ஆதரவும்.
- பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட செய்திகள், தகவல் குறிப்புகள்.

இவை போன்ற பல தகவல்களை உள்ளடக்கியதாக **‘கல்விச் சுடர்’** மின்னிதழ் வெளிவரவிருக்கிறது. ஆக்கங்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம்பெறும். இது மின்னிதழ் என்பதால் சர்வதேச ரீதி யில் குறிப்பாக இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் அனைவரினதும் பார்வைக்கு இந்த சஞ்சி கையை கொண்டு செல்லும் வாய்ப்பு இருக்கிறது.

இந்த சஞ்சிகைக்கு கல்விசார் அறிஞர்கள், புலமையாளர்கள் கல்வித்துறையிலிந்து ஓய்வு பெற்ற வர்கள் மற்றும் பத்திரிகைத்துறையில் அனுபவஸ்தர்கள், சமூகவியலாளர்கள் என்போரின் பேராதரவைக் கோருகிறோம்.

தங்கள் மேலான கருத்துக்களை ஆக்கங்களாக வடிவமைத்து அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கி றோம். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், என்போர்கள் சஞ்சிகைக்குப் பங்களிப்புச் செய்யலாம்.

ஆரம்பத்தில் மாதாந்த மின்னிதழாக அறிமுகமாகும் "கல்விச் சுடர்" சஞ்சிகை எதிர்வரும் காலத்தில் மாதம் இருமுறையாகவும், அச்சுப் பிரதியாக வருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதையும் அறியத்தருகிறோம்.

ஆக்கங்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் அமையலாம்.

கையெழுத்துப் பிரதிகள் A4 தாளில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் அல்லது கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட பிரதிகள் A4 தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் 15.09.22 திகதிக்கு முன்பாக எங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு பின்வரும் மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்துங்கள்:

**kalvichchudaredfsl@gmail.com**

**Educational Development Forum For Sri Lanka U.K. - 0044 7788 196 426**

## முரண்பாடுகளை...

அவரின் நீண்ட உரையில், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் ஜப்பான் சர்வதேச வங்கி பிரதிநிதிகள் ஆகியோருடன் நான் பேச்சு நடத்தினேன். இலங்கையில் முதலீடுகளை அதிகரிப்பதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாக இரு நிறுவன பிரதிநிதிகளும் அறிவித்துள்ளனர்.

ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிதா உடனும் பேச்சு நடத்தினேன். இரு நாடுகளுடனும் தொடர்புள்ள பல முக்கிய விடயங்கள் தொடர்பில் இந்த பேச்சின் போது கவனம் செலுத்தப்பட்டது. இது தவிர ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோருடனும் கலந்துரையாடினேன்.

கடன் மறுசீரமைப்புப் பணிகளில் மத்தியஸ்தராக ஜப்பான் முன்னணி வகிக்க உடன்பட்டிருப்பது நல்ல தொரு அறிகுறியாகும். கடன் வழங்கிய நாடுகளின் மாநாட்டின் இணைத் தலைமைத்துவத்தை ஏற்குமாறு ஜப்பானிடம் கோர எதிர்பார்க்கிறேன்.

இந்தியாவுடன் பேச்சு நடத்தி வருகிறோம். ஜப்பானில் வைத்து பிரதமர் மோடியை குறுகிய நேரம் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அவருக்கு விளக்கினேன்.

அனைத்து சமயங்களிலும் பிரதமர் மோடியின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்திருக்கிறது. கடந்த நெருக்கடி சமயத்தில் இந்தியா பெருமளவு உதவிகளை வழங்கியது. இதற்காக பல சந்தர்ப்பங்களில் நான் இந்தியாவுக்கு நன்றி தெரிவித்துள்ளேன். இலங்கையை மீள கட்டியெழுப்பும் செயல்பாட்டில் இந்தியாவின் ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் கிடைக்கும். தமது சாதகமான பதிலை இந்தியா ஏற்கனவே அறிவித்துள்ளது.

தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி எமக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் உதவியாக வழங்க முன்வந்துள்ளது.

நாடு இப்போது மெல்ல இயல்பு நிலைக்கு திரும்பி வருவதாக அனைத்துத் துறையினரும் தற்போது உணர்ந்து வருகின்றனர். மீண்டும் தமது வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு மக்களுக்கு அதிக தேவைகள் உள்ளன. உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு இதற்கு கிடைத்தால் மட்டுமே இந்தப் பயணத்தைப் பலப்படுத்தவும் துரிதப்படுத்தவும் முடியும். இதனால் பழைய முரண்பாடுகளை மறந்து, இப்பயணத்தில் இணையுமாறு நான் மீண்டும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். விமர்சிப்பதும் தவறாகப் பார்ப்பதும் இலகுவான விடயங்கள். எதிர்ப்பதும் மிக இலகுவான விடயம். ஆனால் தீர்வுகளைத் தேடுவது மிகக் கடினம்.

இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு புத்தபெருமானின் வழிமுறைகளையே நான் பின்பற்றுகின்றேன்.

தேசிய சபை, விரைவில் ஸ்தாபிக்கப்பட உள்ள மக்கள் சபை, பாராளுமன்ற துறைசார் குழுக்கள் போன்றவற்றின் மூலம் நாட்டை கட்டியெழுப்பும் பொதுவான வேலைத்திட்டத்துடன் இணையுமாறு நான் மீண்டும் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ஐ)

## தமிழரின்...

செயல்படும்.

- இவ்வாறு இலங்கை தொடர்பான வரைவு மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் உரையாற்றிய இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இந்திர மணிபாண்டே தெரிவித்தார்.

அத்துடன், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல், அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வு, மாகாண சபை தேர்தல்களை முன்கூட்டியே நடத்துதல் குறித்த தனது உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

“இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் விடயத்தில் இந்தியா எப்போதும் தமிழ் மக்களின் சமத்துவம் - நீதி - கௌரவம் - அமைதி - ஐக்கியம் ஆகிய அபிலாசைகளுக்கு ஆதரவளித்தல், இலங்கையின் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கு ஆதரவளித்தல் என்ற இரு அடிப்படை கொள்கைகளால் வழிநடத்தப்பட்டுள்ளது.

“13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல், அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வு, மாகாண சபை தேர்தல்களை முன்கூட்டியே நடத்துதல் குறித்த இலங்கை அரசாங்கத்தின் உறுதிமொழிகளை நாங்கள் கருத்தில் எடுத்துள்ளோம். இது தொடர்பான முன்னேற்றம் போதுமானதல்ல என நாங்கள் கருதுகின்றோம். இதனடிப்படையில் இந்த உறுதிமொழிகளை விரைவில் நடைமுறைப்படுத்துவது குறித்து அர்த்தபூர்வமாக இலங்கை அரசாங்கம் செயல்படவேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

“அருகில் உள்ள அயல்நாடு என்ற அடிப்படையில் 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், நிவாரணம் மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு இந்தியா பெருமளவு உதவிகளை வழங்கியுள்ளது.

“கடந்த ஜனவரிக்கு பின்னர் இலங்கை மக்கள் சமீபத்தைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட நிலையில், இந்தியா முன்வந்து முன்னர் ஒருபோதும் இல்லாத உதவிகளை வழங்கியுள்ளது.

அனைத்து இலங்கையர்களுக்கும் பொருளாதார செழிப்பை ஏற்படுத்துவதும் இலங்கையில் தமிழ் மக்களின் கௌரவம் அமைதி மற்றும் பொருளாதார வளம் ஆகியவற்றுக்கான நியாயபூர்வமான அபிலாசைகளை நிறைவேற்றுவதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்” - என்றும் கூறினார். (ஐ)

## வடக்கையும்...

மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றியபோதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லிணக்கம், மனித உரிமைகள் பேரவையுடன் இலங்கையின் தொடர்ச்சியான ஆக்கபூர்வமான ஈடுபாடு ஆகியவற்றில் உள்நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், மீண்டும் ஒரு முறை இலங்கை தொடர்பான தீர்மான வரைவு சமர்ப்பிக்கப்பட்டமை வருத்தமளிக்கிறது.

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை ஒரு விரிவான தேசிய பாதுகாப்பு சட்டத்துடன் உள்நாட்டில் முன்னோக்கி நகர்த்தப்பட்டுள்ளது. நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக, ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைக்காக இலங்கை காத்திருக்கிறது. உள்நாட்டு உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவுவது முன்னேற்றகரமான கலந்துரையாடலில் உள்ளது.

இந்நிலையில், இந்தத் தீர்மானமானது அனுசரணையாளர்களின் அரசியல் கருத்துக்களை முன்வைக்கும் நோக்கத்தை பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தாலும், அது இலங்கைக்கு வெளிப்படையாக உதவாது.

மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் உருவாக்கிய “வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை” ‘நீட்டிக்கவும் வலுப்படுத்தவும்’ முயலும், குறிப்பாக செயல்பாட்டு பத்தி (OP) 8 இல் உள்ள முன்மொழிவையும் எதிர்ப்பதாக அமைச்சர் கூறினார்.

# மின்னல் தாக்கி இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 07

மின்னல் தாக்கியதில் இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த மகாலிங்கம் இராகவன் (வயது 34) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று தெல்லிப்பழை, காங்கேசன்துறை பகுதிகளில் இடியுடன்கூடிய சிறிய மழை நேற்று பெய்தது. அச்சமயம், தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தந்தைக்கு உணவு கொண்டு சென்றபோதே மின்னல் தாக்கி இளைஞர் உயிரிழந்தார்.

இதேவேளை, உயிரிழந்த இளைஞரின் குடும்பத்துக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் அனர்த்த இழப்பீட்டை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார். (ஐ - 03)

## 20 ஆதரவு...

கோர் நாடுகள் முன்வைத்த இந்த வரைவு நேற்று பேரவையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது, வரைவுக்கு ஆதரவாக 20 நாடுகளும் எதிராக 7 வாக்குகளும் பதிவாகின. இந்தியா உள்ளிட்ட 20 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் புறக்கணித்தன.

‘இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்’ என்ற தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரைவின்மீது நேற்று வியாழக்கிழமை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில்,

பிரத்தானியா, அமெரிக்கா, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஹொண்டூரஸ், லித்துனியா, லக்ஷம்பேர்க், மலாவி, மார்ஷல் தீவுகள், மெக்சிக்கோ, மொன்டினீக்ரோ, நெதர்லாந்து, பராகுவே, போலந்து, கொரிய குடியரசு, உக்ரைன், ஆர்ஜென்ரீனா, ஆர்மீனியா, செஸ்சியா ஆகிய நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

சீனா, கியூபா, பாகிஸ்தான், எரித்திரியா, உஸ்பெகிஸ்தான், வெனிசுலா, பொலிவியா ஆகிய நாடுகள் எதிராக வாக்களித்தன.

இந்தியா, ஜப்பான், மலேசியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கஸகஸ்தான், லிபியா, பெனின், பிரேசில், கமரூன், கோட் டிவோர், காபொன், காம்பியா, இந்தோனேசியா, மௌரிதானியா, நமீபியா, நேபாளம், கட்டார், செனகல், சோமாலியா, சூடான் ஆகிய நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்தன.

## ஐ. எம். எவ்வின்...

செலுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றம் வந்த ஜனாதிபதி ரணிலிடம் ரணில் விக்கிரமசிங்க சுமந்திரன் எம். பி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த போது, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பையும் பெற்று கொள்ளும் சகல தீர்மானங்களும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிட்டார், ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாடு நிபந்தனைகள் இதுவரை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவில்லை. எப்போது அவை சமர்ப்பிக்கப்படும்? என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, “கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பேச்சு பிரதான கடன் வழங்குநர்களுடன் பேச்சு முன்னெடுக்கப்படுகிறது. ஆகவே, தற்போதைய நிலையில் ஊழியர் மட்ட இணக்கப்பாடு நிபந்தனைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியாது. இன்னும் ஓரிரு வாரங்களுக்கு பிறகு நிபந்தனைகள் தொடர்பில் தெளிவுபடுத்த அவதானம் செலுத்தப்படும் - என்றார். (ஐ)

## 13 வயது சிறுமி...

துள்ளனர். தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வசித்து வந்த 13 வயதுச் சிறுமியே முதியவரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கர்ப்பமாக உள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு விடயம் அறிவிக்கப்பட்டது. பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் கோப்பாய் பகுதியில் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றை நடத்தி வரும் முதியவரே கைது செய்யப்பட்டார்.

சிறுமியிடம் வாக்குமூலம் பெற்றுள்ள பொலிஸார், அவரை மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு சேர்த்துள்ளனர். (ஐ-3)

## சாணக்கியன்...

அவர் இதனை தெரிவித்துள்ளார்.

2022 ஒகஸ்ட் 6ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தொடர்பில் சிறப்புரிமை விடயத்தை எழுப்பியிருந்தேன். அது ஒழுக்கநெறி மற்றும் சிறப்புரிமை குழு தொடர்பானது. இதன்படி ஒக்ரோபர் 4 ஆம் திகதி அது தொடர்பான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி நான் அங்கு சென்றிருந்தேன். ‘பற்றி ரீவி’ அழைக்கப்பட்டு சான்று பகிரப்பட்டிருந்தாக முகநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஓர் அரசியல் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் குறித்த தவறான காட்சியை அனுப்பியுள்ளார்.

அதில் அவரின் குரலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தன் எவருக்கும் பிரயோசனமும் இல்லை. வெறுமனே ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான சான்றுகளின் பிரகாரம் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்பவரால் இது மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை ஒக்ரோபர் 5 ஆம் திகதி சாணக்கியனும் நானும் நண்பகல் 12.45 மணியளவில் ஹோட்டன் பிளேசில் கூட்டமொன்றில் இரண்டு தனிப்பட்ட வாகனங்களில் சென்றோம். நாங்கள் பயணித்துக்கொண்டிருந்த போது பாதுகாப்பு தரப்பினர் எங்களை மோட்டார் சைக்கிளொன்று பின் தொடர்ந்து வந்தது என்று தெரிவித்து அதன் புகைப்படத்தை எடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் இலக்கத் தகடு கொண்ட வாகனமே வந்திருந்தது. புலனாய்வு உறுப்பினர் ஒருவர் எங்களை பின்தொடர்ந்ததாக கறுவாத்தோட்டம் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

என்னுடையதும் இராசமாணிக்கம் சாணக்கியனின் சிறப்புரிமை விடயமே இது. நாங்கள் பாராளுமன்றம் வருவதும் செல்வதும் பாராளுமன்ற சிறப்புரிமைக்கு உட்பட்டதே. சிறப்புரிமை மற்றும் ஒழுக்கநெறி தொடர்பான நடவடிக்கையின் பின்னர் ஏன் எங்களை இப்படி புலனாய்வு உறுப்பினர்கள் பின்தொடர்கிறார்கள்.

புலனாய்வு உறுப்பினர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சபாநாயகர் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது எங்களின் உயிருக்கான அச்சுறுத்தல் என்பதுடன் எங்களின் சிறப்புரிமை மீறலுமாகும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

### கடன் மறுசீரமைப்புக்கு

# இணைத்தலைமை வழங்க ஜப்பான் உடன்படவில்லை!

கொழும்பு, ஒக். 07

**இலங்கையின் கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைக்கு இணைத் தலைமை வழங்க இலங்கையுடன் ஜப்பான் இன்னும் எவ்வித உடன்பாட்டையும் எட்டவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த விடயம் பற்றி நேரடியாக அறிந்த ஜப்பான் அரசாங்கத்தின் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் இதனைத் தெரிவித்துள்ளது.

கடன்கொடுநர்களுடனான, கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் இலங்கையுடன். இணைத் தலைமை வகிக்க ஜப்பான் இணக்கம் வெளியிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய விசேட உரையில் தெரிவித்திருந்தார்.

முன்னதாக கடன் மறுசீரமைப்பு விடயத்தின் இலங்கையின் கடன் கொடுநர்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டினை முன்னெடுக்க தாம் தயாராக உள்ளதாகவும் ஜப்பான் அரசாங்கம் அறிவித்திருந்தது.

அத்துடன், அண்மையில் ஜப்பான் சென்றிருந்த ஜனாதிபதி, அந்நாட்டு அரசாங்கத்துடன், முன்னெடுத்த பேச்சுவார்த்தையின் போது, இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஜப்பான் இணக்கம் தெரிவித்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின்நேற்றைய விசேட உரையை அடுத்து வெளியாகியுள்ள இந்த செய்தியின்படி, இந்த விவகாரம் முக்கியமான ஒன்று என்பதால் இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் ஜப்பான் முழுமையாக ஆதரவளிக்கத் தயாராக உள்ளதென பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவரை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. (அ)

## கோட்டா மீண்டும் அரசியலுக்கு வரும் வாய்ப்புக்களை நிராகரிக்க முடியாது!

கொழும்பு, ஒக். 07

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை நிராகரிக்க முடியாது என விடயமறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஆங்கில இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோட்டாபயவை மீண்டும் அரசியலில் ஈடுபடுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என ஜனாதிபதியுடன் நெருங்கிய தொடர்பை பேணும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

மக்களின் ஆர்ப்பாட்டங்களால் பதவியை இராஜினாமா செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் ஈடுபடுவதற்கு ஆர்வமாகவுள்ளார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் புதிய கூட்டணியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் கோட்டாபய மகிந்தவுடன் இணைந்து செயற்படுவாரா என்பது தெளிவாக தெரியவில்லை என ஆங்கில இணையத்தளம் தெரிவித்துள்ளது. (அ)

## அமெரிக்க கிறீன் கார்ட்டுக்கு நவ.8 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஒக். 07

2024 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க பன்முகத்தன்மை விஸா திட்டம் நேற்று (ஒக்டோபர் 05, 2022) முதல் விண்ணப்பங்களுக்கு திறக்கப்படுவதாக அமெரிக்க வெளியுறவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

'கிறீன் கார்ட்' என்று அழைக்கப்படும், 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகத்தன்மை விசா திட்டத்துக்கு நேற்றிரவு 09.30 மணி முதல் விண்ணப்பிக்க முடியும்.

பன்முகத்தன்மை விஸா திட்டம் 2024 க்கான விண்ணப்பங்கள் நவம்பர் 08, 2022 இரவு 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை அமெரிக்க வெளியுறவுத் திணைக்களத்தின் இணையத்தளமான https://dvprogram.state.gov வழியாகச் சமர்ப்பிக்கலாம்

பன்முகத்தன்மை விசா திட்டம் 2024 க்கு காகித உள்ளீடுகளை அனுமதிக்க மாட்டோம் என்று அமெரிக்க வெளியுறவுத் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும், பன்முகத்தன்மை விசா திட்டமானது சுமார் 50,000 க்கும் அதிகமாக தேர்ந்தெடுக்கப்படும் நபர்களை, அமெரிக்காவுக்கு அதிக குடியேறியோரை அனுப்பாத நாடுகளில் இருந்து மட்டுமே நிரந்தர வதிவிடத்தைப் பெற அனுமதிக்கின்றது. (அ)

## கோப் தலைவர் தேர்தலை புறக்கணித்த அனுரகுமார

கொழும்பு, ஒக். 07

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க, நேற்றைய கோப் தலைவருக்கான வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளார்.

இந்த வாக்கெடுப்பில் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ரஞ்சித் பண்டார 14 வாக்குகளைப் பெற்ற அதேவேளை எரான் விக்கிரமரத்ன 7 வாக்குகளைப் பெற்றார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எரான் விக்கிரமரத்னவுக்கு வாக்களிப்பதாக உறுதியளித்திருந்தனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது, எதிர்க்கட்சிகளுக்கு கோப் குழுவின் தலைவர் பதவியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, ஜே.வி.பி.யின் உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி அந்தப் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டார்.

இருந்தபோதிலும், இம்முறை கோப் குழுவின் தலைவரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் போது அனுரகுமார திஸாநாயக்க அதனை புறக்கணிப்பது நியாயமற்றது என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருதுகின்றனர். (அ)

## தொலைபேசி, இணைய கட்டண அதிகரிப்புக்கு அனுமதி இல்லை

கொழும்பு, ஒக். 07

தொலைத்தொடர்பு நிறுவனங்கள் அதிகரித்து அறிவித்துள்ள தொலைபேசி மற்றும் இணைய கட்டணங்களுக்கு அனுமதி பெறப்படவில்லை என தொலைத் தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

புதிதாக அமுல்படுத்தப்பட்டுள்ள சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கு அமைய, நேற்று முன் தினம் முதல் அமுலாகும் வகையில் தமது கட்டணங்களை மீண்டும் அதிகரிக்க அனைத்து தொலைதொடர்பு சேவை வழங்கல் நிறுவனங்களும் தீர்மானித்தன.

இதன்படி, நேற்று முன் தினம் முதல் தொலைக் காட்சி சேவைகள், முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு கட்டணப் பொதிகள் திருத்தப்படவுள்ளன.

புதிய கட்டணங்கள் தொடர்பிலான தகவல்கள் அந்தந்த தொலைத்தொடர்பு நிறுவனங்களின் இணையத்தளங்களில் தரவேற்றப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த கட்டண உயர்வு தொடர்பில் இதுவரை எவ்வித அனுமதியும்பெறப்படவில்லை என தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

## விவசாயிகளுக்கு மானியமாக எரிபொருள் வழங்கவேண்டும்

### என்.வி.சுப்பிரமணியம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 07

விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படவேண்டும் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், எரிபொருள் ஒழுங்காக வழங்கப்படாமையினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால், விவசாய உற்பத்திகளும் குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உரத்தை இறக்குமதி செய்து அதனை விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். (அ)







## VACANCY

### ACCOUNTS ASSISTANT

A group of companies engaged in Media, Communications, Network and publications looking for an Accounts Assistant in Jaffna District.

Candidate should have passed part II of AAT or finalist, CIMA/ACA II stages with at least 2 years Audit experience. Basic English knowledge an added advantage.

Abilities to operate MS Word, Excel and accounting packages a must.

Attractive remuneration and Allowances offered to the right candidate.

**Send your CV with recently captured photo to Email: johnny@askcable.lk**


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.